
தமிழரசு இலவச இணைப்பு

# அரவிந்தர் நூற்றாண்டு விழா



தமிழ்நாடு அரசினர் அச்சகம்



# அரவிந்தர்
# நூற்றாண்டு விழா

LIBRARY
SEP 1972
ARAVINTAR NŪRRĀNTU
VILĀ
By
Tamil Nadu
1064

2495/72
19/7/64

# தமிழரசு

*1-9-1972*

இதழின் இலவச இணைப்பு

9-SEP 1972

# முன்னுரை

இந்திய விடுதலை இயக்கத்தின் தளபதிகளில் ஒருவராக விளங்கி இருபதாம் நூற்றுண்டுத் தொடக்கத்தில் மக்களிடையே எழுச்சியூட்டிய புரட்சித் தலைவர், அரவிந்தர். சுதந்திரத்துக்காகவும் மக்கள் தம் உள்ளார்ந்த ஆற்றலை வளர்த்து மேன்மை பெறவேண்டும் என்பதற்காகவும் தம் வாழ்வையே ஈந்தவர் அந்த அருட்செல்வர். அரவிந்தர் நூற்றுண்டு விழா நாடெங்கும் கொண்டாடப்படும் நேரத்தில் அரவிந்தர் குறித்து இந்த இலவச வெளியீட்டினைத் தமிழ்ப் பெருமக்களுக்கு அளிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேம்.

வங்கம் தந்த வீரர் அரவிந்தர் தமது இளமைப் பருவம் முழுவதும் மேல்நாட்டிலேயே கற்று மேனாட்டு நாகரிகத்தில் வளர்ந்தவர். பின்னர் கீழை நாட்டுக் கலைகள், இந்திய மொழிகள் இவற்றை எல்லாம் கற்று, இந்தியக் கலாச்சாரச் சிறப்பினை நுணுகி ஆராய்ந்தவர். கல்லூரிப் பேராசிரியராகவும், இதழாசிரியராகவும் விடுதலைப் போருக்கு மக்களைத் தட்டி எழுப்பிய புரட்சிக் கனலாகவும் விளங்கியவர். கவியரசு தாகூர், பால கங்காதர திலகர் மற்றும் பெருந்தலைவர்கள் பலராலும் போற்றப்பட்டவர். இறுதியில் புதுவைத் தமிழ் மண்ணில் அமர்ந்து, மக்கள் குலத்தின் உள்ளார்ந்த ஆற்றலை வளர்க்கப் பல்லாண்டுக் காலம் முயன்று உலகனைத்துக்கும் புதியதோர் கோட்பாட்டைத் தந்தவர்.

இந்திய விடுதலைத் திருநாளின் வெள்ளிவிழா கொண்டாடப்படும் இந்த ஆண்டில், விடுதலைக்காக உயிர் நீத்த, ரத்தம் சிந்திய எண்ணற்ற துன்பங்களை ஏற்ற வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் வணக்கம் செலுத்தி நன்றி பாராட்டுகின்றேம். விடுதலை வீரர், ஆன்மிக அரசியல் தலைவர், அருட்செல்வர் அரவிந்தர் அவர்களின் பணிகளையும் நாட்டு விடுதலைப் போரின் பின்னணியையும் அறிந்து கொள்ள இந்த வெளியீடு பயன்படும் என்று நம்புகிறேம்.

சென்னை  செய்தி—மக்கள் தொடர்புத் துறை,
24—8—1972.  தமிழ்நாடு அரசு.

9 - SEP 1972
MADRAS

'விண்ணுலகின் வனப்பெல்லாம் இந்த மண்ணுலகில் படிய வேண்டும். மானிட வாழ்க்கை அமரத் தன்மை பெறவேண்டும். உலகம் பொய், உடல் நிலையற்றது என்ற கொள்கை ஒழிய வேண்டும்' என்பவை போன்ற அரிய கோட்பாடுகளை வழங்கிய அருட்சித்தர், யோகி எனப்படும் அரவிந்தர் அவர்களின் நூற்றாண்டு விழா அருள்நெறி படர்ந்த பூபாகம் அனைத்திலும், இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் கொண்டாடப்படுகிறது. தமிழக அரசு இவ் விழாவினை விழுமிய முறையில் கொண்டாடுகின்றது.


அரவிந்தர் கல்கத்தாவில் பிறந்தவர். இளமையிலேயே இங்கிலாந்து சென்று ஆங்கிலமும் இதர மேலைமொழிகளும் கற்றுத் தேர்ந்து ஆங்கில நாகரிகத்திலேயே வளர்ந்தவர். இந்தியா திரும்பிய பின் பரோடாவில் கல்லூரிப் பேராசிரிய ராகவும், அதன் பின் கல்கத்தாவில் இதழாசிரியராகவும், விடுதலை வேட்கை கொண்டு புரட்சிக் கனலாகவும் விளங் கியவர். கீழை நாட்டுக் கலைஞானங்களும், இயற்கை அறிவும், மேலை நாட்டு அறிவியல் ஆராய்ச்சிகளும் ஒருங்கு சேரப் பெற்ற நிலையில் அதனை நாட்டு நன்மைக்கும் மக்களின் மேன்மைக்கும் பயன்படுத்த முற்பட்டவர். இறுதியில் செந் தமிழ்த் தென் புதுவையில் ஆசிரமம் அமைத்து ஆன்ம சக்தியின் மீது திடநம்பிக்கை கொண்டு தவமியற்றி, பல நூல்கள் எழுதி, தவ வாழ்வில் நிறைவு கண்ட அரவிந்தரின் வாழ்க்கை, படித்தும் சிந்தித்தும் பயன்பெறத்தக்க ஒன்றா கும்.

மனத்தின் உள்ளுணர்வுகளைத் துருவி ஆராய்ந்தவர், அர விந்தர். ஒரு புதிய சிந்தனைச் சூழலைப் படைத்தவர். ஆனால் மனித வாழ்க்கைக்குச் சுற்றுச் சூழலாக உள்ள உலகம் மாறாவிட்டால், மனத்தின் உள்ளுணர்வு மட்டும் மாறுவதால் பயன் என்ன? அவர் கண்ட புதிய உலகம்-புதிய சக்தி-ஆன்ம சக்தி! அதனை இவ்வுலகில் நிறுவ அவர் விழைந் தார். அவருடைய வாழ்க்கை அந்தப் புதிய உலகம் காணும் முயற்சியின் தொடக்கமேயாகும்.

## ஆசியாவின் ஞான ஒளி

ஆசியாவின் ஞான ஒளி என்று போற்றப்படும் அரவிந்தர் 1872-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15-ஆம் நாள் கல்கத் தாவில் பிறந்தார். (ஆங்கிரச ஆவணி முதல் தேதி) அர விந்தர் பிறந்த அதே ஆண்டில்தான் இத்தாலிய வீரப் புலவர் மாஜினி மறைந்தார். அரவிந்தர் பிறந்த இரண்டு

ஆண்டுகளில் 1874-ல் தமிழகத்தில் அருட்சோதி வள்ளலார் மறைந்தார். மேற்கத்திய ஐரோப்பிய நாகரிகம் உச்சத்தில் இருந்த நேரம் அது. அரவிந்தரின் தந்தையின் பெயர் டாக்டர் கிருஷ்ண தனகோஷ். தாயார் சுவர்ணலதா தேவி.



1910-ல் அரவிந்தர் புதுவை வந்ததும் அவர் முதன் முதலில் தங்கியிருந்த வீடு

டாக்டர் கிருஷ்ண தனகோஷ் கல்கத்தாவிலும் பின்னர் இங்கிலாந்திலும் மருத்துவக் கல்வி பயின்றவர். எம்.டி. பட்டம் பெற்றவர். முற்றிலும் ஆங்கில நாகரிகத்தைப் பின்பற்றியவர்; நாத்திகர். திருமணம் ஆதி பிரம்ம சமாஜ நெறிமுறைப்படி 1864-ல் நடந்தது. அப்போது மணமகன் கோஷுக்கு வயது 19. மணமகளுக்கு வயது 12.

வங்கத்தில் பகல்பூர், ரங்பூர், குல்னு பகுதிகளில் சிவில் மெடிகல் சர்வீசில் மருத்துவ அதிகாரியாக டாக்டர் கோஷ் பணியாற்றினர். அவருக்கு இந்திய மொழிகள், பழக்க

வழக்கங்கள், பண்பாடு எதிலும் பிடித்தமில்லை. ஆங்கில நாகரிகம் தான் உன்னதமானது என்று கருதி வந்தவர். குல்னுவில் டாக்டர் கோஷ், தமது பணியினுல் பெரும் புகழும் பெற்ருர். பொதுப்பணிகளில் சிறந்து விளங்கினுர். நிறையச் சம்பாதித்தார். ஆனுல் இரக்க மனம் காரணமாக எதுவும் சேமித்து வைக்கவில்லை. அவருடைய துணைவி சுவர்ணலதா தேவி வலிப்பு நோயினுல் அவதிப்பட்டவர். அடிக்கடி கோபம் கொள்ளும் இயல்பினர். மனநோயாளியாகவும் அழுந்தினுர். பிற்காலத்தில் டாக்டர் கோஷ் மனக் கசப்பையும் வாழ்வின் துயரங்களையும் மறக்க, பெரும் குடிகாரராக மாறிவிட்டார்.

டாக்டர் கோஷ்—சுவர்ணலதா தம்பதிகளுக்கு ஆறு குழந்தைகள். வினய பூஷண், மனமோகன், மூன்ருவது குழந்தையாக அரவிந்தர், குழந்தையாக இருந்தபோதே மரணமடைந்த ஒரு பையன், சரோஜினி, வரீந்திர குமார் ஆக அறுவர். அரவிந்தம் என்ருல் தாமரை. அரவிந்தர் என்ற பெயர் அப்போது புதுமையான பெயராகக் கருதப் பட்டது. அரவிந்தர், தமது தந்தை பணியாற்றி வந்த குல்னுவில் வளர்ந்தார்.

## ஆங்கிலக் கல்வி, ஆங்கில நாகரிகம்

டாக்டர் கோஷ் தமது குழந்தைகள் அனைவருக்கும் ஆங்கிலக் கல்வியே அளிப்பதென்றும், ஆங்கில நாகரிகப் படியே வளர்ப்பது என்றும் முடிவு செய்தார். வங்கத்தில் பிறந்தவர் ஆனுலும் அரவிந்தருக்கு முதல் ஐந்தாண்டுகளில் வங்காள மொழி தெரியாது. வீட்டு வேலைக்காரர்கள் கூட கொச்சை ஆங்கிலம் அல்லது இந்துஸ்தானி பேசுவோராக இருந்தனர். அரவிந்தரின் தாய்வழிப் பாட்டனுர் ராஜ் நாராயண் போஸ், தேச பக்தர்; இந்தியப் பண்பாட்டில் ஊறியவர். அவருடைய வீட்டுக்கு அரவிந்தரும் மற்றக் குழந்தைகளும் அடிக்கடி சென்று வருவது உண்டு.

அரவிந்தர், ஐந்து வயதாக இருக்கும்போது தமது இரு தமையன்மார்களுடன் டார்ஜிலிங்கில் லோரெட்டோ கான்வென்ட் பள்ளிக்கு அனுப்பப்பட்டார். தங்கிப் படிக்கும் வசதி உள்ள பள்ளி அது. ஐரோப்பியக் குழந்தைகளின் கல்வி வசதிக்காக அது நிறுவப்பட்டது. அரவிந்தரும் உடன் பிறந்தாரும் முற்றும் ஐரோப்பியர்களுடனேயே பழக நேரிட்டது. அரவிந்தர் அங்கு இரண்டு ஆண்டுக்காலம் பயின்ற போது, அவரது கூர்ந்த மதி நுட்பம் கண்டு ஆசிரியர்கள் வியந்தனர். விடுமுறை நாட்களில் மட்டும் இக் குழந்தைகள் தாய்வழிப் பாட்டனுர் இல்லம் சென்று வந்தனர்.

சுவர்ணலதா தேவியின் மனநிலைக் கோளாறு காரணமாக அரவிந்தர் அன்னையின் அன்பை நிறைவாகப் பெற இயலாத நிலையே இருந்தது.

## இங்கிலாந்தில் படிப்பு

குழந்தைகளின் படிப்பைக் கருதி டாக்டர் கோஷ் குடும்பம் 1879-ல் இங்கிலாந்துக்குப் புறப்பட்டது. அப்போது அரவிந்தருக்கு வயது ஏழு. இங்கிலாந்தில் மான்செஸ்டர் நகரில் டாக்டர் கோஷ், தமது நண்பரின் நண்பரான ட்ருயெட் பாதிரியாரிடம் தமது குழந்தைகளின் கல்விப் பொறுப்பை ஒப்படைத்தார். கீழை நாட்டுக் கலாச்சாரம், இந்தியக் கலாச்சாரம் இவற்றின் தொடர்பு சிறிதுமின்றி, முற்றிலும் மேலைநாட்டுப் பாணியிலேயே தமது குழந்தைகளின் கல்வியும் வளர்ப்பும் அமையவேண்டும் என்று திட்டம் செய்து விட்டு, டாக்டர் கோஷ் இந்தியா திரும்பினார். அரவிந்தரும் அவருடைய தமையன்மார் இருவரும் மான்செஸ்டரில் ட்ருயெட் குடும்பத்தாருடன் தங்கிக் கல்விபயின்று வந்தனர். டாக்டர் கோஷ் அவர்களின் விருப்பப்படி இக் குழந்தைகள் அப்பகுதியில் இருந்த இந்தியர்களுடன் தொடர்பு ஏதும் கொள்ளவில்லை. இந்தச் சகோதரர்களுக்குக் கடவுளைத் தொழும் பழக்கமும் இல்லை. வயது வந்ததும் தங்களுக்கு எது பிடித்தமோ அந்த மதத்தில் இருக்கட்டும் என்று ட்ருயெட் இவர்களை விட்டுவிட்டார்.

இங்கிலாந்தில் இருந்த தமது மூன்று மக்களுக்கு முதலில் ஒழுங்காகப் பணம் அனுப்பி வந்தார் டாக்டர் கோஷ். பின்னால் அவர்கள் இலண்டனில் இருந்து படித்துவரத் தலைப்பட்ட போது பணம் சரியாக அனுப்பப்படவில்லை. இளமையிலேயே பணம் இல்லாத, வசதிக் குறைவான நிலைமைகளுக்கும் துயரங்களுக்கும் ஆளான போதிலும், அரவிந்தர் அதை ஒருபொருட்டாகக் கொண்டதில்லை. அரவிந்தரையும், அவருடைய தமையன்மார்களையும் வைத்துப் பேணிய இல்லத்தின் அம்மையார் மிகப் பரிவுள்ளவராக இருந்தார்.

## மேலை மொழிகளில் புலமை

மான்செஸ்டரில் அரவிந்தர் ஆங்கிலம், இலத்தீன் ஆகிய மொழிகள் கற்றார். விவிலிய நூல் மற்றும் புகழ்பெற்ற ஆங்கில இலக்கியங்களைக் கற்றறிந்தார். பின்னர் இக்குழந்தைகள், இலண்டன் நகர் சென்று அங்கு ட்ருயட்டின் தாயார் ஏற்பாடு செய்த இல்லத்தில் இருந்து படித்து வந்தனர். 1884-ல் அரவிந்தர் இலண்டன் செயின்ட்பால் கல்லூரியில் சேர்ந்தார். அங்குக் கிரேக்க மொழியில் நல்ல

தேர்ச்சி பெற்ருர். நிறையப் படித்தார். பள்ளிப் படிப்பைக் காட்டிலும் பொதுக் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தினர். இலக்கியப் பரிசுகள் பல பெற்ருர். அவருடைய மொழி அறிவையும் மதி நுட்பத்தையும் நினைவாற்றலையும் கண்டு ஆசிரியர்கள் பெரிதும் மகிழ்ந்தனர்.

அரவிந்தர் இளம் வயதிலேயே கவிதைகள் புனைந்தார். சிறுவஞக இருந்தபோதே அவர் எழுதிய கவிதைகள் பத்திரிக்கைகளில் இடம் பெற்றன. இவருடைய தமையன் மனமோகனும் கவிதை இயற்றும் ஆற்றலைப் பெற்றிருந்தார். ஆங்கிலத்தில் மட்டுமின்றிக் கிரேக்க மொழி, இலத்தீன் மொழியிலும் அரவிந்தர் கவிதைகள் இயற்றினர். இவருடைய அறிவாற்றல் இப்படி வளர்ந்த நேரத்தில், வீட்டிலிருந்து பணம் வருவது குறைந்தது; தடைப் பட்டது. ஆனல் அதற்காகச் சகோதரர்கள் மூவரும் மனம் வருந்தியவர்களல்லர். தந்தையின் செயல் பற்றிக் கசந்து கொண்டதும் இல்லை. மாருகத் தங்கள் தந்தையைப் பற்றிப் பெருமையுடனேயே பேசினர்.

அரவிந்தர் எழுதிய

காவியங்கள்

இளமையில் இங்கிலாந்தில் கல்வி கற்று வந்தபோதே கவிதை எழுதத் தொடங்கினர் அரவிந்தர். பரோடாவில் கல்லூரிப் பேராசிரியராக இருந்த சமயம் கவிதை இயற்றுவதில் அவருடைய ஆற்றல் முழு மலர்ச்சி பெற்றது. ‘சாவித்திரி’ அவருக்கு அழியாப் புகழ் அளித்த காவியம். அது முழுமையாக உருப்பெற 25 ஆண்டுகள் ஆயின. 23,813 அடிகள் கொண்டதும் உரை நடைப்பாவில் அமைந்ததுமான அது ஆங்கில மொழியில் எழுதப்பட்ட கவிதைகளில் மிக நீண்டதாகும். சத்தியவான் சாவித்திரி கதையை அடிப்படையாகக் கொண்ட தத்துவார்த்த விளக்கம் அக்காவியம். ஊர்வசி என்ற அவருடைய நீண்ட கவிதை 1896-ல் பரோடாவில் வெளியிடப்பட்டது. 1899-ல் அரவிந்தர் எழுதிய ‘காதலும் சாதலும்’ என்னும் காவியமும் சிறப்பு வாய்ந்தது. ‘பாஜி பிரபு’ என்பது அவருடைய மற்ருெரு இதிகாச காவியம். இவை தவிர மொழி பெயர்ப்புகள், தனிப்பாடல்கள் பல எழுதியிருக்கிருர்.

## ஐ.சி.எஸ். படிப்பு

பின்னர் கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியில் சேரும்போது அரவிந்தருக்கு வயது 18. அங்கு அவருக்கு உபகாரச் சம்பளம் கிடைத்தது. இந்தியன் சிவில் சர்விஸ்—ஐ.சி.எஸ் —தேர்வு எழுதும் தகுதியைப் பெற்ற அரவிந்தர், கிங்ஸ் கல்லூரியில் படித்துக் கொண்டே, ஐ.சி.எஸ். எழுதவும் தயார் செய்து கொண்டிருந்தார். தனி ஆசிரியரை வைத்துத் தேர்ச்சி பெற அவருக்குப் போதிய பணம் இல்லை. கல்லூரி உபகாரச் சம்பளத்திலிருந்தும், ஐ.சி.எஸ். பரிசோதனைக் காலத்துக்கு அளிக்கப்பட்ட சிறு சன்மானத் தொகையிலிருந்தும் தன் உடன் பிறந்தோருக்கும் அவ்வப்போது உதவ வேண்டி வந்தது.

இக்கல்லூரியில் நுழைவுத் தேர்வு ஒன்றில் அரவிந்தரின் விடைத்தாள்களைத் திருத்திய ஒரு பேராசிரியர், இவருடைய நுண்ணறிவைக் கண்டு வியந்து போனார். "எனது 13 ஆண்டுக் கால அனுபவத்தில் உன் விடைத் தாள்களைப் போல அருமையான விடைகளை நான் பார்த்ததே கிடையாது" என்று பாராட்டிவிட்டு "எங்கே வசிக்கிறாய்?" என்று கேட்டார். அதற்கு அரவிந்தர் சொன்ன பதிலைக் கேட்டு விட்டு அந்தப் பேராசிரியர் "அந்த மோசமான குகையிலா தங்கியிருக்கிறாய்? அறிஞர்களுக்குத்தான் எத்தனை சோதனை!" என்றாராம்.

## மணி விளக்கு

அரவிந்தரின் கல்வி முன்னேற்றம் கண்டு பூரித்துப் போன தந்தை டாக்டர் கிருஷ்ண தன கோஷ், தனது மைத்துனருக்கு எழுதிய கடிதத்தில்:

"என் மக்கள் மூன்று பேர்களை நான் உலகம் வியக்கும் பெருமக்களாக்கிவிட்டேன். நாட்டின் மணி விளக்குகளாக அவர்கள் ஒளி வீசப் போகின்றனர். அப்போது அவர்களைக் கண்டு பெருமைப்பட நான் உயிருடன் இருக்க மாட்டேன். நீ இருப்பாய். அரவிந்தன் தன் திறத்தால் நாட்டுக்கே சிறப்பளிப்பான் என்று எண்ணுகிறேன். அவன் தன் சொந்தத் திறமையாலேயே கேம்பிரிட்ஜ் கிங்ஸ் கல்லூரியில் படிக்கிறான்" என்பதாகக் கூறியிருக்கிறார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மும்மொழிப் புலமைத் தேர்வுக்கும் அதே நேரத்தில் ஐ.சி.எஸ். தேர்வுக்கும் ஆயத்தமாகி வந்த அதே காலக் கட்டத்தில் அரவிந்தர் வேறு இரு வேலைகளையும் மேற்கொண்டிருந்தார். அவற்றுள் முதலாவது: இந்திய

நாட்டின் விடுதலைக்குப் பணியாற்றுவதற்காக இங்கிலாந்தில் இருந்த இந்திய மாணவர்கள் அமைத்திருந்த இந்திய மஜ்லிஸ் சங்கத்தின் வேலைகளில் அவர் முனைப்புடன் ஈடுபட்டார். சிறிது காலம் அச்சங்கத்தின் செயலாளராகவும் இருந்தார். அவரது மனத்துக்கிசைந்த மற்றொரு பணி, கவிதை எழுதுவது. படிப்பு, தேர்வு ஆகியவைகளில் அவர் சிறந்து விளங்கினாலும் மஜ்லிஸ் சங்கப் பணியும், கவிதை இயற்றுவதும் தான் அவரைப் பெரிதும் கவர்ந்தன. 'மார்த்தில்லாகீதங்கள்' அவர் இங்கிலாந்தில் இயற்றியவை. தமது 18-வது வயதில் தான் அரவிந்தர் வங்க மொழி கற்கத் தொடங்கினார். ஐ.சி.எஸ். தேர்வு பெறுவதற்கு ஆங்கில மாணவன் சிறிது இந்துஸ்தானி அல்லது சமஸ்கிருதம் கற்றுக் கொள்வது போல அவர் தாய் மொழியாகிய வங்காளியைக் கற்றார். பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலிய மொழிகளையும் கற்றார்.

ஐ.சி.எஸ். தேர்வுகளில் அரவிந்தர் சிறப்பிடம் பெற்றுத் தேறினார். ஆனால் சிவில் சர்விஸ் பதவிக்கு நியமிக்கப் படுவதற்கு முன் குதிரையேற்றத்தில் பயிற்சி பெற்றுத் தேற வேண்டியிருந்தது. அந்தத் தேர்வுக்கு அவர் செல்லாமலேயே இருந்துவிட்டார். மீண்டும் வாய்ப்பு அளிக்கப் பட்டும் கூட, குதிரையேற்றத் தேர்வுக்குச் செல்லவில்லை. அந்த நேரத்தில் எங்கோ சுற்றிக் கொண்டிருந்தார்.

## பதவியைப் பெறாதது ஏன்?


இந்தப் பெரும் பதவியைக் கை நழுவ விட்டதற்கு உண்மைக் காரணம் என்ன? அதை அவரே பின் ஒரு சமயம் தமது நூலில் குறிப்பிட்டார்: 'ஐ.சி.எஸ். பதவி மீது எனக்கு ஆர்வம் இல்லை. இந்த அடிமைத் தளையிலிருந்து தப்ப ஏதேனும் ஒரு வழியைத் தேடிக் கொண்டிருந்தேன். இப்பதவியை மறுத்துத் தள்ளிவிட என் குடும்பத்தினர் ஒருக்காலும் விடமாட்டார்கள். எனவே குதிரையேற்றத் தேர்வுக்குத் தகுதியற்றவனாக ஆக்கிக் கொள்ளத் தான் சில உபாயங்களை மேற்கொண்டேன்'' என்று கூறியிருக்கிறார்.

அரவிந்தர், ஒதுங்கிப் போகும் இயல்பினராகவும் அடக்கம் வாய்ந்தவராகவும் இருந்தார். ஆனால் மன உறுதியிலும் கடின உழைப்பிலும் வல்லவர். இந்திய மஜ்லிஸ் சங்கத்தில் இந்திய விடுதலை கோரி அவர் நிகழ்த்திய உரைகள் வீராவேசம் வாய்ந்தவை. இந்தச் சகோதரர்களின் இங்கிலாந்து வாழ்க்கை பற்றி அதிகமான விவரங்கள் தெரியவில்லை. இந்தியன் மஜ்லிசில் அவருடைய விடுதலை முழக்கம்,

ஒரு பிஞ்சு உள்ளத்தின் குரல் அல்ல; உள்ளத்திண்மையின் சங்க நாதம் அது என்பது அவர் இந்தியா திரும்பியதும் மேற் கொண்ட பணிகள் உறுதிப்படுத்தின.

## இரகசியச் சங்கம்

அரவிந்தர் 1892 அக்டோபரில் கேம்பிரிட்ஜிலிருந்து வெளியேறி இலண்டன் சென்றுர். அரவிந்தரைவிட இரண்டு வயது மூத்தவரான சித்தரஞ்சன் தாஸ், ஐ.சி.எஸ்.



உலக மாநகரம் ஆரோவில்—புதுவை அருகில் நிருமாணிக்கப்பட்டு வரும் காட்சி

தேர்வின் பொருட்டு 1890-91-ல் இலண்டனில் இருந்தார். அப்போது அவரது நட்பைப் பெற்றுர் அரவிந்தர். இலண்டன் நகரிலிருந்த இந்திய மாணவர்கள் "தாமரையும் குத்து வாளும்" என்ற பெயருடைய இரகசியச் சங்கம் ஒன்றை நிறுவினர். அதன் உறுப்பினர்கள், இந்திய விடுதலைக்காக ஏதேனும் ஒரு தியாகம் செய்ய வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டனர். அரவிந்தர் அச் சங்கத்தில் சேர்ந்தார். ஆனல் அச்சங்கம் அப்படியே செயலற்று நின்று விட்டது.

அயர்லாந்து விடுதலை இயக்கத்தின் எதிரொலியை இங்கிலாந்தில் நேருக்கு நேர் பார்த்தவர் அரவிந்தர். இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்கு முறைகளையும், மக்களின் மனக்-

குமுறல் பற்றிய செய்திகளையும் துருவிக் கவனித்து வந்தார். அவர் இலண்டனில் இருந்தபோது டென்னிசன், பிரௌனிங் ஆகிய கவிஞர்களை நேரே அறிந்திருந்தார். கிளாட்ஸ்டன் சொற்பொழிவுகளைக் கேட்டார். பல்வேறு நாடுகளின் விடுதலை இயக்கங்களும் அவருடைய உள்ளத்தைத் தொட்டன. மேலை நாட்டு நாகரிகத்தில் வாழ்ந்தாலும் அதன் ஆடம்பரமும், பூச்சும் அவரைக் கவர்ந்ததில்லை. இந்திய நாட்டின் மரபையும் ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்ட உள் ஒளியின் மீது அவர் நம்பிக்கை வேரூன்றி வளர்ந்தது. இந்தியாவின் பழம்பெரும் இலக்கியங்கள், வேதம், உபநிடதம் ஆகியவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகளை ஆராய்ந்த போது, உள் ஒளியில் நம்பிக்கை மேலும் வளரலாயிற்று.

## பரோடா மன்னர் உதவி

அரவிந்தர் இலண்டனில் இருந்த சமயத்தில் பரோடா சமஸ்தான இளவரசர் கெய்க்வார் மகாராஜா இலண்டன் சென்றிருந்தார். அரவிந்தரின் அறிவாற்றலையும் மதி நுட்பத்தையும் அறிந்த மகாராஜா, சமஸ்தானப் பணியில் ரூபாய் 200 சம்பளத்தில் அவருக்கு ஒரு பதவி அளித்தார்.

சிவில் சர்வீசில் தேர்ந்தவரை ரூ. 200 சம்பளத்தில் அமர்த்த முடிந்தது குறித்து அந்த மன்னருக்கு மகிழ்ச்சி. அரவிந்தருக்குப் பணம் பற்றியும் உலகியல் வாழ்க்கை பற்றியும் ஏதும் தெரியாததால் கொடுத்ததை ஏற்றுக் கொண்டு இந்தியா திரும்பினார். இந்தியாவின் சமய ஞானச் சிறப்பை மேலை நாடுகளுக்கெல்லாம் எடுத்துரைக்க சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவுக்குப் புறப்பட்ட அதே 1893-ஆம் ஆண்டில் தான் அரவிந்தர் இந்தியாவுக்குத் திரும்பினார்.

புறப்படுவதற்கு முன்பு தாம் இன்ன கப்பலில் வருவதாகத் தந்தைக்குத் தெரிவித்திருந்தார். அக் கப்பல் லிஸ்பன் கடற்கரைக்கு அப்பால் கடலில் மூழ்கிவிட்டது. அச்சேதியை அறிந்த கிருஷ்ண தனகோஷ் தனது மகன் இறந்துவிட்டதாகக் கருதி அதிர்ச்சியால் நோய்வாய்ப்பட்டார். அரவிந்தர் இந்தியா வந்து சேருவதற்குச் சில நாட்களுக்கு முன்பே அவர் மரணமடைந்தார். ஆனால் அரவிந்தர் அக்கப்பலில் பயணம் செய்யவில்லை. அடுத்த கப்பலில் பம்பாய் வந்து சேர்ந்தார். சிறிது காலத்திற்கெல்லாம் அரவிந்தரின் மூத்த அண்ணன் வினயபூஷன் இந்தியாவுக்குத் திரும்பி, கூச்பீகார் சமஸ்தானத்தில் இளவரசருக்குத் தனி ஆசிரியராகப் பணியாற்றினார். அரவிந்தரின் இளைய அண்ணனும் கவிஞருமான மனமோகன் கல்கத்தா மாநிலக் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக வேலைக்கமர்ந்தார்.

## இந்தியமண்

மேலை நாட்டுக் கல்வி, கலைஞானம் ஆகியவற்றில் பெரும் புலமை பெற்று, பல்வேறு அனுபவங்களைக் கண்டு, நீண்ட இடைவெளிக்குப் பின் பிறந்த பொன்னுட்டுக்குத் திரும்பிய அரவிந்தர், பம்பாய் அப்பாலோ பந்தரில் காலடி வைத்ததும் அவருடைய உடல் சிலிர்த்தது! உள்ளமும் உணர் வனைத்தும் என்றுமறியாத புதிய அனுபவத்தைக் கண்டன. 'இந்திய மண்ணை மீண்டும் மிதித்து முதல் அடி எடுத்து வைத்த போது பரந்ததோர் அமைதி இறங்கி வந்து என்னுள்ளத்தில் குடி கொண்டது' என்று அரவிந்தர் இது பற்றிப் பின்னர் குறிப்பிட்டார்.

அரவிந்தர் 1893 பிப்ரவரியில் பரோடா அரசுப் பணியில் சேர்ந்தார். நிலவரித் துறையிலும் பின்னர் வருவாய்த் துறை யிலும் வேலை பார்த்து வந்தார். அதே நேரத்தில் பரோடா பல்கலைக் கழகத்தில் பிரஞ்சு மொழி விரிவுரையாளராகவும் பணியாற்றினர். மன்னருக்காகக் கடிதங்கள், சொற் பொழிவுகள், முக்கியமான பத்திரங்கள் தயாரிக்கவும் பணிக்கப்பட்டார். ஆயினும் இந்தப் பணிகள் அனைத்திலும் கல்லூரிப் பேராசிரியர் வேலையே அவருக்கு மிகவும் பிடித் திருந்தது. அவருடைய வேண்டுகோளின்படி ஆங்கிலப் பேராசிரியராக நியமனம் பெற்ருர். அவரது அறிவாற்ற லையும் திறனையும் கண்டு வியந்த மாணவர்கள் அவரைப் பெரிதும் பாராட்டி மிகுந்த அன்பு செலுத்தினர். அவரு டைய விரிவுரைகளைக் கேட்டு எழுச்சியும் ஆர்வமும் பெற்ற னர். அவருடைய மாணவர்களில் ஒருவரான கே. எம். முன்ஷி மாணவர்களிடையே அரவிந்தருக்கு இருந்த செல் வாக்கைப் பற்றி வியந்து எழுதி இருக்கிருர்.

## பணம் பற்றித் தெரியாது

அரவிந்தர் எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். சுவையான உணவு சொகுசான உடை என்று என்றும் கவலை கொண்ட தில்லை. பணத்தைச் சேமிக்கும் எண்ணம், பணம் கணக்குப் பார்க்கும் வழக்கம் அறவே கிடையாது.

வருங்காலப் பெரும் பணிக்கு அரவிந்தரை ஆயத்தம் செய்த சிறப்பும் பெருமையும் பரோடா சமஸ்தானத்துக்கே உண்டு. மேலைநாட்டுக் கல்வி, அறிவியல், நாகரீகம், பண் பாடு இவற்றை ஆய்ந்தறிந்து, அதன் அடிவேரைக் கண்டு வந்தவரான அரவிந்தர், கிழக்கத்திய நாடுகளின் கலை, நாகரிகம், இந்திய நாட்டின் கலாச்சாரச் சிறப்பு, பாரம் பரியம் இவைகளையெல்லாம் பரோடாவில் தான் படித்தறிந்து தெரிந்தார். இந்திய மொழிகள், வரலாறு, பண்பாடு பற்றிய ஆராய்ச்சி அவரைக் காந்தம் போலக் கவர்ந்தது.

நகைச் சுவை

அருட்சித்தர் அரவிந்தருக்கு நகைச்சுவை உணர்ச்சி நிரம்ப உண்டு. தத்துவ ஞானம் பற்றி எழுதுவதில் தமக்குள்ள ஆற்றலைத் தாமே நையாண்டி செய்து அவர் ' திலிப் ' புக்கு எழுதிய கடிதத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார் :—

அப்புறம், இந்தத் தத்துவ ஞானம்! இது குறித்து ஒரு இரகசியத்தை உன்னிடம் சொல்லி விடுகிறேன். நான் என்றுமே தத்துவ ஞானியாக இருந்ததில்லை. தத்துவ ஞானம் பற்றி எழுதியிருக்கிறேன் என்றால் அது வேறு கதை. நான் ஒரு கவிஞன், ஓர் அரசியல் வாதி; ஆனால் தத்துவ ஞானி அல்ல! தத்துவ ஞானி ஆவதற்கு என்னால் எப்படி முடிந்தது? ஏன் ஆக நேர்ந்தது? என்பதற்கும் பதில் சொல்லுகிறேன். தத்துவ ஞான இதழ் தொடங்குவதில் என்னுடைய ஒத்துழைப்பு வேண்டும் என்று திரு. ரிச்சர்டு கேட்டுக் கொண்டார். யோகி ஆக இருக்கும் ஒருவன் எந்தப் பணியும் செய்ய வல்லவன் என்பது என் கொள்கை. ஆனதால் அவரது வேண்டுகோளைத் தட்ட இயலவில்லை. அவரோ, இதழ் தொடங்கிய பின்பு போருக்குப் புறப்பட்டுப் போய் விட்டார். 64 பக்கங்களைக் கொண்ட மாத இதழுக்கு தத்துவ ஞான விஷயங்களாகப் போட்டு நிரப்ப வேண்டிய பொறுப்பு என் மீது விழுந்தது. அத்தனையும் நான் தனி ஆளாகச் செய்ய நேர்ந்தது!

## அங்கே இல்லாதது

மேலை நாட்டு நாகரிகம் குறித்து முழுமையாக அறிந்திருந்ததன் காரணமாக அந்த நாகரிகத்தில் உள்ள குறைபாடுகளை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அந்த நாகரிகத்தின் விஞ்ஞான அணுகுமுறை, ஒழுங்குமுறை, ஆற்றல் எல்லாம் அவருக்குத் தெரிந்தவை. ஆனால் மனித குலத்தின் பரிணாம வளர்ச்சிக்கு அடுத்த கட்டத் தேவை எதுவோ அந்த ஆன்மீகத் தன்மை வாய்ந்த உயரிய நோக்கு மேலை நாகரிகத்தில் இல்லை என்று உணர்ந்தார்.

மேலை நாட்டு நாகரிகத்தின் ஆணிவேர் எது என்பதை உணர்ந்திருந்த அவர், இந்திய வாழ்வை என்றும் உயிரோட்டத்துடனும் இளமையுடனும் வைத்திருக்கும் கலாச்சாரத்தின் ஆணிவேரைத் துருவித் தேட முற்பட்டார். இந்தியாவின்

புகழ் வாய்ந்த கலாச்சாரம் குறித்துப் பெருமையடைந்தார். இத்தகைய பெருமையுள்ள நாடு அடிமைத்தனத்தில் வீழ்ந்து கிடப்பது பற்றியும் மக்களின் வறுமைக் கோலம் குறித்தும் மனம் நைந்தார்.

இந்தியாவை, இந்தியக் கலாச்சாரத்தை, துருவி ஆராய்ந்து அறிந்து கொள்ளும் முயற்சியில் முதலில் வங்காளி மொழியை நன்கு கற்றார். 1898—99-ல் அம் மொழியில் நல்ல புலமை பெற்றார்.

## கவியுள்ளம்


அடுத்தபடியாகச் சமஸ்கிருதம் கற்றார். ஆழ்ந்து, விடாது, அதனைக் கற்றார். உபநிடதம், கீதை இவைகளை ஆராய்ந்தார். இந்தியச் சிந்தனை, கோட்பாடுகள் குறித்து அநாயாசமாக எழுதினார். வடமொழியில் கற்றவைகளை எல்லாம் ஆங்கிலமாக்கினார். பின்னர் பரோடாவில் பழக்கத்திலிருந்த மராத்தி, குஜராத்தி மொழிகள் கற்றார். அவருடைய நூல் நிலையத்தில் பல்வேறு மொழிகளிலும் நூல்கள் மண்டிக் கிடந்தன. அவ்வப்போது வரும் புது நூல்களில் நல்ல நூல்களைப் பெறவும் பம்பாயில் ஏற்பாடு செய்து வைத்திருந்தார். கவியுள்ளம் படைத்த அவர் பல்வேறு துறைகள் குறித்தும் தம் உள்ளக் கருத்துக்களைக் கூறும் தனிப்பாடல்களை எழுதினார். தமக்கு ஒன்பது வயது மூத்தவரான கவி ரவீந்திரநாத் தாகூரின் கவிதைகளைப் படித்து மகிழ்ந்தார். 'ஊர்வசி' என்ற இவருடைய நீண்ட கவிதை 1896-ல் வெளியிடப்பட்டது.

இந்திய நாகரிகம், ஆன்மீகச் சக்தி குறித்து சுவாமி விவேகானந்தரும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும் தந்த விளக்கங்கள், கருத்துக்கள் அரவிந்தரைப் பெரிதும் கவர்ந்தன. பங்கிம் சந்திரரின் நூல்களையும் விரும்பிப் படித்தார். அமெரிக்கா, சிகாகோ நகரில் சர்வ சமய மாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு இந்தியா திரும்பிய விவேகானந்தர் சென்னைக் கூட்டத்தில் உரைநிகழ்த்தும் போது 'தேசிய இனமாக உயிர் வாழ ஆன்ம சக்தி அவசியம் என்பதை மேலை நாடுகள் படிப்படியாக உணர்ந்து வருகின்றன. மேற்கத்திய நாகரீகம் ஒரு எரிமலையின் உச்சியில் உட்கார்ந்திருக்கிறது. எந்த நேரத்திலும் அது வெடித்துச் சிதறுண்டு போகக் கூடும். இந்தியாவின் ஆன்மீகச் சக்திதான் மேலை உலகில் ஊடுருவிப் பயன் அளிக்க வல்லது' என்று முழக்கம் செய்தார். மற்ற துறைகள் அனைத்தையும் விட ஆன்ம நேயப் பணி, ஆன்ம சக்தி ஆகியவையே அரவிந்தரை அதிகம் கவர்ந்தன.

## தாயைக் கண்ட தனயன் நிலை

இந்தியா திரும்பிய பின்பு 1894-ல் தான் அரவிந்தர் முதன் முதலாக வங்காளம் சென்றார். ரோகிணி கிராமத்தில் தமது தாயைப் போய்ப் பார்த்தார். வலிப்பு நோயால் அழுந்திய அவர் தம் மகன் அரவிந்தரை உடனடியாக அடையாளம் கண்டுகொள்ளக்கூட இயலவில்லை. அரவிந்தனுக்குக் கையில் வெட்டுக் காயத் தழும்பு இருக்குமே என்றார். அந்தத் தழும்பைக் காட்டிய பிறகுதான் ஒருவாறு அடையாளம் கண்டார். அரவிந்தர் தமது தாயாருக்கும் தங்கை சரோஜினியின் படிப்புக்கும் பணம் அனுப்பி வந்தார்.

அரவிந்தருக்கு 1901-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. பெரிய பதவியில் இருந்த பூபால போஸ் என்பவரின் மகள் மிருணாளினி தேவியை அவர் மணந்தார். மணமக



புதுவை அரவிந்தாசிரம, அரவிந்தர் கல்லறையில்
சீடர்கள் தியானம் செய்கின்றனர்

னுக்கு அப்போது வயது 29 ; மணமகளுக்கு வயது 14. இந்து சமயச் சடங்குகளின்படித் திருமணம் நடைபெற்றது. அரவிந்தர் கடல் கடந்து இங்கிலாந்து சென்றிருந்தவர் ஆதலால் பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று சில வைதிகர்கள் வற்புறுத்தினர். அரவிந்தர் மறுத்துவிட்டார். தலை மொட்டையாவது அடித்துக்கொள்ள வேண்டும் என்றனர்.

அதற்கும் அரவிந்தர் மறுத்துவிட்டார். பிரபல விஞ்ஞானி ஜகதீச சந்திரபோஸ், சின்ஹா பிரபு முதலானோர் இத் திருமணத்துக்கு வந்திருந்தனர்.

## துணைவியின் வருத்தம்

எல்லாக் குடும்பப் பெண்களையும் போல, ஆசாபாசங்கள் சூழ்ந்த இல்லறவியல் வாழ்க்கையையே மிருணாளினி விரும்பினார். அந்த நிலையிலிருந்து அவர் எளிதில் தம்மை மாற்றிக் கொள்ள இயலவில்லை. தமது கல்வி, அறிவாற்றல், புலமை ஆகியவை குடும்பத் தேவைக்காக வேண்டியவை போக எஞ்சியவை நாட்டுக்காகவும், நாட்டின் கோடிக்கணக்கான ஏழை மக்களுக்காகவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்று அரவிந்தர் உறுதியாகத் தெரிவித்த போது, மிருணாளினி தேவிக்கு வருத்தமே உண்டாயிற்று. தம் திருமண வாழ்க்கையில் இன்பமில்லை எனக் குறைப்பட்டுக்கொண்டார். "கணவன் மேற்கொள்ளும் பணிகள் அனைத்திலும் மனைவி கைகொடுத்து உறுதுணையாக இருக்க வேண்டும். அதுவே அறம். துன்பத்தைக் குறைத்துக் கொள்வதற்கும் அதுதான் வழி" என்று அரவிந்தர் அவருக்கு அவ்வப்போது எடுத்துச் சொல்லி வந்தார்.

அரவிந்தர் பரோடாவில் தமது 32-ஆம் வயதில்தான் யோகம் பயிலத் தொடங்கினார். தவத்தினாலும் யோகத்தினாலும் சக்தி பெறலாம் என்று கருதியதும், அந்தச் சக்தியை நாட்டின் விடுதலைக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். நர்மதை நதி தீரத்தில் இருந்து வந்த சுவாமி பிரம்மானந்தா என்ற பெரியாரின் சீடரான இஞ்சினீயர் தேவதாசிடமிருந்து பிராணாயாம முறையைத் தெரிந்துகொண்டு தாமே பிராணாயாமம் செய்யத் தொடங்கினார். நாள் ஒன்றுக்கு சுமார் 6 மணி நேரம் இந்தப் பயிற்சி செய்துவந்தார். இதனால் மனம் தெளிவும் ஒளியும் பெற்றதாக உணர்ந்தார். நினைவு ஆற்றலும் அதிகரித்தது. அரவிந்தர் அவ்வப்போது சுவாமி பிரம்மானந்தரைச் சந்தித்து வந்தார்.

## மூன்று பைத்தியங்கள்

தம் மனைவி மிருணாளினி தேவிக்கு எழுதிய கடிதத்தில் அரவிந்தர் தமக்கு உள்ள மூன்று பைத்தியங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். அதில் முதல் பைத்தியம் என்று அவர் சொல்லியிருப்பது :

'நான் பெற்றுள்ள புலமையை, அறிவாற்றலை என்குடும்பத்தின் நலனுக்கு என்று நிறுத்திக் கொள்ளாமல் இந்நாட்டுக்காக, மக்கள் அனைவருக்குமாக ஈடுபடுத்துவேன்' என்பதாகும்.

அவருடைய இரண்டாவது பைத்தியம் கடவுளைக் காண்பது பற்றியது ; அவர் அதில் சொல்லுகிறார்:—

"இந்தக் காலத்தில் எடுத்ததற்கெல்லாம் கடவுள் பெயரைச் சொல்லுவதும் எல்லாரும் அறியப் பிரார்த்தனை செய்வதும் பக்தியைப் பகட்டுடன் காட்டுவதுமே சமய நெறி என்று மக்கள் எண்ணுகிறார்கள். இறைவன் இருப்பது உண்மையானால் அவ்வுண்மையை நாமே உணர்ந்து அவனை நேருக்கு நேராகக் காண்பதற்கு ஒரு வழி இருக்கத்தான் வேண்டும். என்ன ஆபத்துக்கள் வந்தாலும் நான் அவ்வழியில் சென்றே தீரவேண்டும் என்று உறுதி கொண்டிருக்கிறேன். அவ்வழி நமக்குள்ளேயே இருக்கிறது என்று இந்து சாத்திரங்கள் கூறுகின்றன. அவ்வழியில் செல்வதற்குரிய சில விதிகளையும் அவை சொல்லுகின்றன. நான் அவ்விதிகளில் ஒழுகத் தொடங்கியிருக்கிறேன். ஒரு மாதத்துக்குள்ளாகவே இந்து சாத்திரங்களின் போதனை எனக்குப் புலனாகிவிட்டது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

## அறிவின் வலிமை

தமக்கு உள்ள மூன்றாவது பைத்தியம் குறித்து அரவிந்தர் எழுதியிருப்பது வருமாறு:—

"இந்த நாட்டை வயல்களும், ஆறுகளும், காடுகளும் அடங்கிய நிலப்பரப்பாக நினைக்காமல், இதனை அன்னை என நினைத்து வழிபடுகிறேன். அன்னையின் மார்பிலே ஒரு அரக்கன் வந்து உட்கார்ந்துகொண்டு அவளுடைய குருதியை உறிஞ்சுவானாகில் மகன் கவலை யாதுமின்றி, தனது மனைவி மக்களுடன் உல்லாசமாகக் காலம் கழிப்பானா ? தன் அன்னையைக் காப்பாற்ற உடனே வழி தேடுவான் அல்லவா? இழிநிலை அடைந்துள்ள இந்நாட்டைக் காப்பாற்றும் வலிமை எனக்குண்டு. இதனை நான் உணர்ந்திருக்கிறேன். எனக்கு உடல் வலிமை இல்லை. ஆனால் நான் கத்தியையோ, துப்பாக்கியையோ, ஏந்திப் போர் புரியப் போவதில்லை. அறிவின் வலிமையினாலேயே போர் புரியப் போகிறேன். அறிவை ஆதாரமாகக் கொண்ட ஆத்ம சக்தி ஒன்று உள்ளது. இப்பணியினை நிறைவேற்றவே இறைவன் என்னை அனுப்பியுள்ளான்."

தம் உள் மனத்தின் ஒலி போன்ற இந்த உரைகளை அரவிந்தர் வேறு யாரிடமும் கூறியவர் அல்லர். அவர் தம் துணைவிக்கு எழுதிய கடிதத்தின் பகுதிகள் இவை.

பரோடாவில் அரவிந்தரின் அரசியல் ஈடுபாடுகளில் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கது அவருடைய எழுத்துக்களாகும். கேம்பிரிட்ஜில் அரவிந்தரின் உற்ற நண்பராக இருந்த கே. ஜி. தேஷ்பாண்டே, பம்பாயில் நடைபெற்று



ஆரோவில் முன்னோடி நகர் நிலக்கப் பணியின் ஒன்றா திண்ணைக்குடில்
திறந்தவெளி அரங்கம், பின்னணியில் ஆரோவில் உருவாகும் காட்சி

வந்த 'இந்து பிரகாஷ்' என்ற பத்திரிகையின் ஆங்கிலப் பகுதிக்கு ஆசிரியராக இருந்தார். அரவிந்தரைக் கட்டுரைகள் எழுதுமாறு அவர் கேட்டுக்கொண்டிருந்தார். அரவிந்தரும் 'பழையன கழிதல், புதியன புகுதல்' என்ற தொடரில் 16 கட்டுரைகள் எழுதினார்.

சக்தி வாய்ந்த நடையில் அவர் எழுதிய கட்டுரைகள் கண்டு அரசியல் உலகம் பரபரப்படைந்தது. பெரிய இடங்களிலிருந்து ஆட்சேபங்கள் எழுந்தன. [illegible]

சிறிது தணிக்குமாறு அரவிந்தரிடம் சொல்லப்பட்டது. அதன் விளைவாக அரவிந்தர் உற்சாகம் குன்றி, ஏதோ ஒரு விதமாக எழுதிக் கட்டுரைத் தொடரினை முடித்தார்.

மாதிரிக்காக அவருடைய கட்டுரையின் ஒரு பகுதி இங்குத் தரப்படுகிறது :

> 'பிரான்சை எடுத்துக்கொள்ளுங்கள். அது நல் வாய்ப்புப் பெற்ற நாடு. ஒழுங்கான, அமைதியான முறையில் அது வளர்ச்சி அடையவில்லை. இரத்தத்திலும், தீயிலும் குளித்துத் தூய்மையடைந்த பிறகே முன்னேற்றத்தின் முதல்படியில் அது ஏறிற்று. அறியாமையில் உழன்ற பெரும் பகுதியினரான பாமர மக்களே வீறு கொண்டெழுந்து, பதின்மூன்று நூற்றூண்டுகளாக மலை போல் குவிந்திருந்த அநீதிகளை ஐந்து பயங்கரமான ஆண்டுகளில் அறவே ஒழித்தனர். ஆனல் இங்கோ, இந்திய மக்கள் அனைவரின் ஆணையைத் தாங்கி நிற்கும் ஜனநாயக அமைப்பாக ஆக்குவதற்கு நேர்மையான எந்த முயற்சியும் செய்யவில்லை.'

## ரகசியச் சங்கங்களுடன் தொடர்பு

பரோடாவில் பேராசிரியராக வேலை பார்த்து வரும் போதே அரவிந்தர் அடிக்கடி வங்காளம் சென்று வந்தார். அப்போது வங்கம் பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைகளை எதிர்த்துக் குமுறிக் கொண்டிருந்தது. தேசிய உணர்ச்சி பொங்கி எழுந்தது. இளைஞர்களிடையே விடுதலை உணர்வும் புரட்சி மனப்பான்மையும் வளர்ந்து வந்தன. ஆங்காங்கே ரகசியச் சங்கங்கள் தோன்றின. அரவிந்தர் அந்த இளைஞர்களுக்கு உற்சாகமும் ஆதரவும் தந்து வந்தார். மகாராஷ்டிரம், பஞ்சாப் ஆகியவைகளில் புரட்சிச் சங்கங்கள் தோன்றியதைத் தொடர்ந்து அவைகளுடனும் ரகசியத் தொடர்பு கொண்டார். விடுதலைப்போரை நடத்தக் காங்கிரசால் இயலாது என்று எண்ணினர்.

இந்தியா ஒரு துணைக் கண்டம். அதைக் காக்க இருக்கின்ற பிரிட்டிஷ் படைகளோ மிகக் கொஞ்சம். அந்நிய ஆட்சியை எதிர்த்து விடுதலைப் போர் மூளுமானல் மக்களின் எழுச்சியைத் துணை கொண்ட கொரில்லாப் போர் நடத்துவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றும், ராணுவத்தில் புரட்சிக் கருத்துக்களைப் பரப்பி ராணுவத்தை மக்கள் பக்கம் திருப்பலாம் என்றும் அரவிந்தர் கருதினர்.

## சுதந்தரம் பற்றிக் கணிப்பு

அதே சமயத்தில் பிரிட்டிஷாரின் குண இயல்புகளையும் அரவிந்தர் கணித்துக் கூறினுர். 'சுயவிடுதலைக்கான எந்த முயற்சியையும் அவர்கள் எதிர்ப்பார்களாயினும் ஏகாதிபத்தியம் பலவீனமடையாத வகையில் சிறுசிறு சீர்திருத்தங்களுக்கு அவர்கள் இசைவார்கள். கடைசி வரை ஒரே பிடிவாதமாக இருக்கமாட்டார்கள். எதிர்ப்பும் கிளர்ச்சியும் நீடிக்குமானுல் சமரசத்துக்கு வருவார்கள். நிலைமை முற்றிப் போகுமானுல் மக்கள் தாமே அதிகாரத்தைக் கைப்பற்றும் வரையில் காத்திராமல் தாங்களாகவே சுதந்தரமளித்து விட்டுப் போய்விடுவார்கள்' என்பது அன்றே அவருடைய கருத்தாக இருந்தது.

விடுமுறையில் ஒரு தடவை வங்கம் சென்றிருந்த அரவிந்தர், வங்கத்திலிருந்த தமது கடைசித் தம்பி வரீந்திரரைத் தம்முடன் பரோடாவுக்கு அழைத்துக்கொண்டு வந்தார். பல பேர்களுடன் அரவிந்தர் தொடர்பு கொண்டார். மகாராஷ்டிரப் புரட்சிக்காரர்களுடனும் தொடர்பு கொண்டிருந்தார். புரட்சிச் செயல்கள் மூலமாக நாட்டுப் பணியாற்ற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்று கருதினுர். பவானி மந்திரத் திட்டம் என்று ஒரு திட்டமும் உருவாகியது. இளைஞர்களுக்கு யோகத்திலும் அன்னை வழிபாட்டிலும் பயிற்சி அளிக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கம். பவானி திட்டப்படி அரவிந்தரும் தேஷ்பாண்டேயும் பாரத வித்தியாலயம் ஒன்றை நிறுவினர். ஆனுல் இத்திட்டம் முழுதுமாகச் செயல்படவில்லை.

## திலகருடன் தொடர்பு

சுவாமி விவேகானந்தரின் சிஷ்யையான சகோதரி நிவேதிதையை அரவிந்தர் 1902-ல் சந்தித்தார். இதே ஆண்டிலிருந்துதான் திலகரிடமும் தொடர்பு கொண்டு வந்தார். 1902-ல் சுரேந்திரநாத் பானர்ஜி தலைமையில் ஆமதாபாத்தில் காங்கிரஸ் பேரவைக் கூட்டம் நடந்தபோது அரவிந்தர் அம் மாநாட்டுக்குச் சென்றிருந்தார். திலகரைச் சந்தித்துப் பேசினுர். தொடர்ந்து தீவிரவாதிகளின் கூட்டங்களில் கலந்து கொண்டார். 1905-ஆம் ஆண்டில் வங்கப் பிரிவினை காரணமாக தேசிய இயக்கம் புதிய வீறுகொண்டது. புரட்சியாளர்களும் தீவிரமாகச் செயல்பட்டனர். வரீந்திரர் நடத்திய 'யுகாந்தர்' என்னும் இதழில் அரவிந்தர், தம் பெயரைப் போடாமல் கட்டுரைகள் எழுதி வந்தார். வங்கத்தில் பல இடங்களில் புரட்சியாளர்களின் அனுசீலன் சமிதி கிளைச் சங்கங்கள் தோன்றின. 1906-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பரோடா கல்லூரியில் ஓராண்டு விடுமுறை எடுத்துக்

கொண்டு அரவிந்தர் வங்கம் சென்றார். பரோடாவை விட்டுச் செல்ல வேண்டாம் என்று மன்னர் எவ்வளவோ கேட்டுக் கொண்டும் அரவிந்தர் அதற்கு இசையவில்லை.

வங்கம் சென்றதும் அரவிந்தர் காங்கிரசிலிருந்து கிளைத்த ஒரு புது தீவிரக் கட்சியான புது வங்கக் கட்சியில் சேர்ந்தார். கல்கத்தாவில் தேசியக் கல்விக் கழகத்தின் தலைவராக ரூ. 150 சம்பளத்தில் சேர்ந்தார். பரோடாவில் அவர் பெற்று வந்த சம்பளத்தில் இது 5-ல் ஒரு பகுதியாகும்.

## ரூ. 500 மூலதனத்தில் நாளிதழ்

இதற்கிடையில் விபினசந்திர பாலர் 1906-ல் ரூ. 500 மூலதனம் கொண்டு ''வந்தே மாதரம்'' என்ற நாளிதழ் தொடங்கினார். 'வந்தே மாதரம்' என்ற சொற்றொடருக்குப் பெரும் சக்தி இருந்த நேரம் அது. விபினசந்திர பாலர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அரவிந்தரே 'வந்தே மாதரம்' இதழின் பொறுப்பை ஏற்றார். வன்மையும் கம்பீரமும் தைரியமான சுதந்தரப் போக்கும் சீரிய லட்சியங்களும் கொண்ட 'வந்தே மாதரம்' இதழ் எழுத்துக்கள் மக்களைக் கவர்ந்தன. புத்துணர்ச்சி ஊட்டின. ஒவ்வொரு இல்லத்திலும், 'வந்தே மாதரம்' ஒலித்தது. பங்கிம்சந்திரர் இயற்றிய 'வந்தே மாதரம்' கீதத்தை இயக்கமாக ஆக்கிய பெருமை அரவிந்தரையே சேரும். இந்தியப் பத்திரிகைகளில் எந்த இதழும் அடையாத ஒரு நிலையை அது பெற்றது. கல்லூரி வேலை, 'வந்தே மாதரம்' இதழ் வேலை ஆகியவற்றுடன் வங்கம் முழுவதிலும் சுற்றுப் பயணம் செய்து அரசியல் பணிகளிலும் ஈடுபட்டு வந்தார். 'நாட்டுத் தொழில்களை ஊக்குவிக்கவேண்டும்; தேசியக் கல்வி முறை அவசியம். அந்நிய ஆட்சியுடன் ஒத்துழையாமையைக் கடைப்பிடிக்க வேண்டும். பிரிட்டிஷ் ஆட்சியை நீக்க இதுவே வழி' என்று அவர் வலியுறுத்தினார். ஒரு சுற்றுப் பயணத்தின்போது கவியரசர் ரவிந்திரநாத் தாகூரைச் சந்தித்தார்.

## ராஜ நிந்தனைக் குற்றச்சாட்டு

'வந்தே மாதரம்' இதழில் கனல் பொறி பறக்கும் எழுத்துக்களைக்கண்ட பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் சீறியது. அதன் தொடர்பாக அரவிந்தரும் விபினசந்திரபாலரும் கைது செய்யப்பட்டனர். அரவிந்தர் குற்றச் சாட்டு வரம்புக்குள் அகப்பட்டுக்கொள்ளாதபடி மிகத் திறம்பட எழுதி வந்தார். ஆகவே அவருடைய எழுத்துரைகளிலிருந்து குற்றச்சாட்டு எதுவும் கூறமுடியவில்லை. எனவே வரீந்திரர் நடத்திய 'யுகாந்திரம்' என்னும் வங்காளி இதழில் வந்திருந்த

கட்டுரையை மொழி பெயர்த்துப் போட்டுக்கொண்டதற்காக அரவிந்தரை அவ்வெளியீட்டுக்குப் பொறுப்பாளியாக்கி, ராஜ நிந்தனைக் குற்றம் சாட்டினர். விசாரணை முடிவில் அரவிந்தர் விடுதலையானார். விபின சந்திர பாலர் 6 மாத சிறைத் தண்டனை பெற்றார். இந்த வழக்குக் காரணமாக அரவிந்தரின் புகழும் செல்வாக்கும் பெருகின. இதனையடுத்து- அடுத்த மூன்று ஆண்டுகள் அரவிந்தர் வெளிப்படையாகவே எழுதினார். மேடைகளிலும் முழங்கினார். தேசிய இயக்கத்தின்

## ஆசிரம வாழ்க்கை

புதுவை அரவிந்தாசிரமத்தில் அன்றாட வாழ்க்கை மேலோட்டமாக மற்ற மனிதர்களின் இயல்பான வாழ்க்கையைப் போன்றுதான் இருந்தது. உணவு வகைகளில் தமக்குப் பிடித்தமானது என்று எதையும் கேட்கமாட்டார். பிடிக்காதது என்று எதையும் தள்ளவும் மாட்டார். பிடித்தமான கறி வகையைச் சற்றுக் கூட உண்பார். பிடிக்காததைச் சற்றுக் குறைவாக உட்கொள்வார். சைவ உணவே உண்டார். எதிலும் ‘மிதம்’ என்பதே அவருடைய நடைமுறையாக இருந்தது. தென்னிந்திய அடிசில் வகைகளில் அவருக்கு ரசம் மிகவும் பிடிக்கும்.

தினமும் செய்தித் தாள்கள் படிப்பார். உலக நடப்புகள் குறித்துக் கருத்துக்களும் சொல்லுவார். வினாக்களுக்குப் பதில் எழுதுவார். யாரிடமும் சினந்து கொள்ளமாட்டார். நல்ல நகைச்சுவை உணர்வு உள்ளவர். பணியாற்றிய வண்ணம் இருப்பார். முனைந்து செயல்படும் இயல்பினர். சமய சத்திய நெறியில் நம்பிக்கைகொண்டவர் என்பது தவிர சமயச் சடங்குகள் எதையும் கடைப் பிடித்ததில்லை. மேலோட்டமான இந்த இயல்புக்கிடையே அவருடைய உள் மனம் ஒன்றில் லயித்திருக்கும். ஏதோ சில சமயங்களில் தான் நிட்டையில் அமர்ந்திருக்கும் நிலையில் இருப்பார். மற்றப் பெரும்பாலான நேரங்களில் சாதாரணமான அலுவல்களில் இருக்கும் போதே அவர் மனம் ஒன்றில் குவிந்திருக்கும்.

(அரவிந்தர் கால்எலும்பு முறிவுக்காகச் சிகிச்சை பெறும்போதும் அதற்குப் பின்னரும் அவருடன் இருந்த மருத்துவர் நிரோட் பாரன் கூறிய குறிப்பிலிருந்து.)

தனிப்பெருந் தலைவரென அரவிந்தர் போற்றப்பட்டார். ஒரு சமயம் கவியரசர் ரவீந்திர நாத் தாகூர் "ஓ! அரவிந்தா! என் நாட்டின் நண்பா! பாரத சக்தியின் சுதந்தரக் குரலின் ஒரு வடிவமாக வந்த மகானுபாவா" என்று பூசித்து எழுதினார்.

வந்தே மாதரம் இதழில் அரவிந்தர் எழுதிய எழுத்துக்களில் ஓர் எடுத்துக்காட்டு இது :—

"சுதந்தரம்தான் ஒரு சமுதாயத்தின் ஜீவன், உயிர். அச்சமுதாயம் மூச்சுவிட முடியாதபடி ஒடுக்கப்பட்டால் தற்காப்புக்காக அது மேற்கொள்ளும் எவ்வழியும் எம்முறையும் நியாயமானதேயாகும். ஆட்சி அமைதியான முறையில் சட்ட ரீதியில் நடைபெறுமானால் அடிமைப்பட்ட மக்கள் சாத்வீக எதிர்ப்பை மேற்கொள்ளலாம்".

"சுயராஜ்யம் பெறுவதற்குச் சாத்தியமான வழிகள் மூன்று. அதிகாரிகளுக்கு மனுப்போடுவது ஒரு வழி. எந்த நாடும் இந்த வழியைப் பின்பற்றிச் சுதந்தரம் அடைந்தது கிடையாது. சுய முயற்சியால் நாமே முன்னேறுவது மற்றொரு வழி. அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்தை மக்கள் ஒன்று கூடி எதிர்ப்பது மூன்றாவது வழி. இது வரலாற்றில் காணப்படும் சம்பிரதாயமான முறை.

"நீதியும், நேர்மையும் அரசியல் தர்மத்துக்குரிய சூழ்நிலைகள்தாம். ஆனால் போர்வீரனுக்குரிய நீதி தர்மங்கள், பூசாரியின் நீதி தர்மங்களிலிருந்து மாறுபட்டவை."

"நீதி, நியாயம் இவைகளை நிலை நிறுத்த ஒரு ஞானியின் புனிதத் தன்மை போலவே, போர் வீரனின் வாளும் இன்றியமையாதது."

## சூரத் காங்கிரஸ் களம்

1907-ல் டிசம்பரில் கூடிய சூரத் காங்கிரஸ் பேரவைக் கூட்டம் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்குமிடையேயான சண்டைக் களமாகப் போய்விட்டது. மகாராஷ்டிரத்திலிருந்து தேசியவாதிகளின் தளகர்த்தராகத் திலகர் வந்திருந்தார். தமிழகத்திலிருந்து தீவிரவாதிகளாக மகாகவி பாரதியார், வ.உ. சிதம்பரம் பிள்ளை, சர்க்கரைச் செட்டியார் முதலியோர் சென்றிருந்தனர். கல்கத்தாவிலிருந்து அரவிந்தர் தமது தொண்டர்களுடன் வந்திருந்தார். மிதவாதிகள் தரப்பில் கோகலே, காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்

பட்ட ராஷ் பிகாரி கோஷ், வி. கிருஷ்ணசாமி அய்யர் ஆகியோர் இருந்தனர். மாநாடு குழப்பத்தில் முடிவடைந்த பின்னர் அரவிந்தர் பம்பாய் மாகாணம், மத்தியமாகாணம் பரோடா முதலியவைகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, கல்கத்தா திரும்பினார். பின்னர் 'வந்தே மாதரம்' இதழில் ''சாவா?வாழ்வா?'' என்ற தலைப்பில், தொடர் கட்டுரைகள் எழுதினார். இதே சமயத்தில் கவிதைகளும் எழுதி வந்தார்.

## புரட்சிவாதிகளின் வெடிகுண்டு


'யுகாந்தர்', 'அனுசீலன் சமிதி' முதலிய நிறுவனங்களைச் சேர்ந்த புரட்சி வாதிகள் வெடிகுண்டு தயாரிப்பதிலும், தலைமறைவுப் புரட்சி வேலைகளிலும் ஈடுபட்டிருந்தனர். 1907-ல் வங்காள லெப்டினன்ட் கவர்னர் சர் ஆஸ்ட் பிரேசரைக் கொல்ல முயன்ற ஒரு முயற்சி பலிக்கவில்லை. வெடிகுண்டுகள் தயாரிப்பதில் பயிற்சி பெற்றுவர ஒருவரை பிரான்சுக்கும் அனுப்பினர். பயிற்சி பெற்றவர் திரும்பி வந்ததும் கல்கத்தாவுக்கு அருகே மாணிக்தோலா தோட்டத்தில் வெடிகுண்டு தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டனர். நாட்டுப் பற்றையும் நாட்டுப் பணியையும் இறைவனின் ஆணை என்று கருதிய அரிய குணநலம் படைத்த பல இளைஞர்கள் அன்று அவ்வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அரவிந்தரின் கடைசித் தம்பி வரீந்திரர் இதில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டார்.

புரட்சி வாதிகள், பிரசிடென்சி மாஜிஸ்திரேட்டாக இருந்த ஒரு ஆங்கிலேயர் மீது குறி வைத்து வீசிய வெடிகுண்டு குறிதவறி, இரண்டு ஐரோப்பிய பெண்களின் உயிரைப் பறித்தது. இதன் தொடர்பாக அநேகர் கைது செய்யப் பட்டனர். மாணிக்தோலா தோட்டம் சோதனையிடப் பட்டது. சில ஆயுதங்களும் வெடிமருந்துப் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. வரீந்திரர் கைதானார். 1908, மே 5-ஆம் தேதி அரவிந்தரையும் விலங்கிட்டுக் கைது செய்தனர். இதனால் நாடெங்கும் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## அலிப்பூர் சதி வழக்கு

அரவிந்தர் மீதும் மற்றவர்கள் மீதும் வழக்கு ஆரம்பமாகியது. இதுவே அலிப்பூர் சதி வழக்கு என நாடெங்கும் பிரபலமடைந்தது. வழக்குக்காக ரூ. 60,000 வரை நிதி தேவைப்பட்டதால் அரவிந்தர் வழக்கு நிதி என்று ஒரு நிதி தொடங்கப்பட்டது. அரவிந்தர் தங்கை சரோஜினி இந்த நிதி குறித்து ஒரு வேண்டுகோள் விடுத்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல்வேறு வகைப்பட்ட மக்களும் இந்த நிதிக்கு அள்ளிக் கொடுத்தனர். அரவிந்தரின் ஐரோப்

பிய நண்பர்களும் அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகியவை களிலிருந்தும் கூட அவரை அறிந்தவர்கள் உதவி செய்தனர்.



அலிப்பூர் சதி வழக்கு விசாரணைக் கைதி அரவிந்தர்

அரவிந்தர் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் படித்த போது, அவருடன் படித்தவரும் பின்பு நீதிபதி ஆனவருமான நீதிபதி பீச்சிராப்ட் செஷன்ஸ் நீதிபதியாக விசாரணையை மேற்கொண்டார். அரசின் தரப்பில் புகழ்பெற்ற வழக்குரைஞர் இயர்ட்லி நார்ட்டன் வாதாடினர். அரவிந்தர் சார்பில் சித்தரஞ்சன் தாஸ் வாதாடினர். பிற்காலத்தில் மாபெரும் தேசியத் தலைவராகவும் வழக்குரைஞராகவும்புகழ் அடைந்தவர் சித்தரஞ்சன் தாஸ். வழக்கு ஆறு மாத காலம் நடைபெற்றது. 206 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். 4,000 தஸ்தாவேஜிகள், வெடிகுண்டு மற்ற கருவிகள் போன்ற 5,000 காட்சிப் பொருட்கள் விசாரணையில் இடம் பெற்றன. அரவிந்தர் தம் துணைவிக்கு எழுதிய கடிதங்களும் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டன. இவ்வளவும்

இருந்தும் அரவிந்தர் மீது கொண்டு வந்த குற்றச்சாட்டை நிரூபிக்க முடியவில்லை. அரவிந்தர் தாம் யாதொரு அறிக்கையும் சமர்ப்பிக்க விரும்பவில்லை. என்றும் தமது வழக்கு முழுவதையும் வக்கீல்களிடம் ஒப்படைத்துவிட்டதாகவும் கூறிவிட்டார்.

## நார்ட்டன் வாதம்

இந்த வழக்கு விசாரணையில் அரசு தரப்பு வழக்குரைஞர் நார்ட்டன் தமது வாதத்தில் குறிப்பிட்டது வருமாறு :

''பூர்ண சுதந்திரம் வேண்டுமென்று போதனை செய்வது குறித்து எவரும் வெட்கமடையத் தேவையில்லை. எனக்குத் தெரிந்தவரை அவ்வித போதனைக்கு எதிராக எந்த ஆங்கிலேயனும் ஒரு வார்த்தை கூடச் சொன்னதில்லை. அரசியல் சுதந்தர வேட்கை பிழையென்று யாரும் சொல்ல மாட்டார்கள். அரசியல் சுதந்தரம் வேண்டுமென்ற எண்ணத்தை மனத்தில் ஒளியுறும் வண்ணமாகக் கொண்டு அதன் பொருட்டே வாழ்க்கை நடத்துவதும் பணியாற்றுவதும் நியாயமே. தங்கள் தினசரி அலுவல்களுக்கு அச்சிந்தனையையே ஆதாரமாகவும் தங்கள் தார்மிக விருப்பத்துக்கு அதனையே அளவாகவும் கொண்டிருப்பது நியாயமே. இதை நாங்கள் அனைவரும் ஒன்றுபோல் ஏற்றுக் கொள்கிறோம். அதே நேரத்தில் இந்த வேட்கைகளை நிறைவேற்றும் பொருட்டு, இப்பேற்றை அடையும் பொருட்டு, நான் இப்போது விவரித்து வரும் கொலைச் செயல்கள் போன்றவற்றில் ஈடுபடுதல் சரி என எவரும் ஒப்பமாட்டார்கள்''.

## சித்தரஞ்சன் எதிர்வாதம்


சித்தரஞ்சன் தாஸ் தமது வாதத்தில் குறிப்பிட்டதாவது :

''ஓரிரு ஆங்கிலேயரின் மீதோ, அங்குமிங்குமாகப் பல்வேறு இடங்களில் ஒருசில ஆங்கிலேயரின் மீதோ வெடி குண்டுகள் வீசுவதால் பிரிட்டிஷ் ஆட்சியைக் கவிழ்த்துவிட முடியும் என்று அரவிந்தர் ஒருக்காலும் நம்பியிருந்திருக்க முடியாது. அவர் அறிவாற்றல் மிக்கவர் என்றும் மேதா விலாசம் படைத்தவர் என்றும் அரசுத்தரப்பிலேயே கூறினார்கள். அதே மூச்சில் இச்சிறுபிள்ளைத்தனமான சதிக்கு, பொம்மைப் புரட்சிக்கு, அவர் தலைமை வகித்தார் என எங்ஙனம் கூற முடியும் ?''

முடிவில் அரவிந்தர் குற்றவாளி அல்லர் என்று தீர்ப்பளித்து நீதிபதிகள் அவரை விடுதலை செய்தனர். வரீந்திரருக்கும் உல்லாசுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. 10 பேர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அரவிந்தர் விடுதலை குறித்து நாடெங்கும் மக்கள் பெருமகிழ்ச்சி கொண்டனர். (வரீந்திரரும் மற்றும் சிலரும் முதல் உலகப்போருக்குப் பின் சிறைக்கைதிகளுக்கு அளிக்கப்பட்ட பொது மன்னிப்பில் விடுதலை அடைந்தனர். வரீந்திரர் 1921-ல் புதுவை சென்று அரவிந்தருடன் சில காலம் தங்கியிருந்தார். பின்னர் வங்காளம் சென்று விட்டார். 1959-ல் அவர் காலமானார்).

## சிறையில் தவம்

சதிவழக்கு விசாரணையின் போது அரவிந்தர் 1908 மே 5 முதல் 1909 மே 6-ஆம் தேதிவரை சரியாக ஓராண்டுக் காலம் அலிப்பூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தார். அரசியல் கைதிகளுக்குச் சலுகை ஏதும் இல்லாத காலம் அது.



ஆரோவில் நகருக்கு முன்னோடியாக அமையும் நகரப்பகுதியின் தொடக்கப்பள்ளி.

விசாரணைக் கைதியாக இருந்தும் தண்டிக்கப்பட்ட கைதி போலவே நடத்தப்பட்டார். 9 அடி நீளம் 5 அடி அகலமுள்ள ஜன்னல் இல்லாத அறையில் அவர் தனித்து வைக்கப்பட்டிருந்தார். உண்பது, கழிவது, சிறுநீர் பெய்வது யாவும்

அதிலேயே. வெய்யில் கொடுமையாலும், அவர் அவதிப் பட்டார். மெல்லக் மெல்லச் சிறை வாழ்க்கைக்குத் தம்மைப் பழக்கிக் கொண்டார். பின்னர் அதிகாரிகள் அவரை அறைக்கு வெளியே காலையிலும் மாலையிலும் சிறிது நேரம் உலவ அனுமதித்தார்கள். இறைவன் அவசியமானதொரு படிப்பினை கருதியேஇவ்வண்ணம் சிறையில் இருக்கச் செய்த தாக அரவிந்தர் கருதினார். கீதை, உபநிடதம் இவைகளை வரவழைத்துப் படித்தார். இந்து தர்மத் தத்துவங்களை உணர்ந்தார். சாதனையிலும் தியானத்திலும் பொழுதைக் கழித்தார். விரும்பிக் கேட்டவர்களுக்குக் கிரேக்க மொழி கற்றுக் கொடுத்தார்.

## தத்துவ ஞானியாக மாறினார்

அரவிந்தர் சிறையிலிருந்து வெளி வந்த போது, பால கங்காதர திலகர் ஏற்கெனவே பர்மாவின் மாண்டலேயில் நீண்டகாலச் சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். தேசியக் கட்சி குன்றிப்போய் இருந்தது. 'வந்தே மாதரம்' நின்று போய்விட்டது. அரவிந்தரின் வாழ்க்கை நோக்கில் ஒரு மாறுதல் தெரியவந்தது. புரட்சிக் கனலாக இருந்தவர் தத்துவ ஞானியாக மாறி இருந்தார். விடுதலை பெற்று வந்ததும் உத்தரபாராவில் இந்து சமயப் பாதுகாப்புக் கழக விழாவில் பேசிய போது அந்த மாற்றம் நன்கு புலனாயிற்று. சிறைச்சாலை எனக்குத் தவச்சாலையாக இருந்தது என்றார். எங்கும் இறையொளியையே கண்டதாகக் கூறினார். ''நான் சொல்லுவதற்கு ஒரு சொல்லையும் செய்வதற்கு ஒரு செயலை யும் இறைவன் அளித்திருக்கிறான். அதை உலகுக்குச் சொல் லுவேன்'' என்று கூறினார்.

விடுதலையடைந்து வந்த இரண்டு மூன்று மாதங்களில் ஆங்கிலத்தில் 'கரும யோகி' என்ற வாரப் பத்திரிகையையும், வங்காள மொழியில் ''தர்மம்'' என்னும் வார இதழையும் தொடங்கினார். தவ வலிமை குறித்து அவற்றில் எழுதினார். சனாதன தர்மக் கொள்கைகளைக் கூறினார். ''நமது குறிக் கோள் அரசாங்கத்தை மாற்றி அமைப்பது அல்ல. ஒரு சமுதாயத்தை நிர்மாணம் செய்வதே குறி ஆகும். அப் பணியின் ஓரம்சமே அரசியல். அரசியல், சமய சாத்திரம், தத்துவம், விஞ்ஞானம், இலக்கியம் இவை எல்லாமும் நாம் முக்கியமானதாகக் கருதும் தேசியச் சமயமாகிய ''தர்மம்'' என்பதற்குள் அடங்கும். இந்தத் தர்மம் நமது நாட்டுக்கு மட்டுமன்றி எல்லா உலகுக்குமே உரியதெனக் கொள்ளு கிறோம்'' என்று எழுதினார்.

## யோகம் என்ருல் என்ன?

''ஞானம், பக்தி, கருமம் ஆகியவற்றின் மூலமாக இறைவனுடன் ஒன்றுவதே யோகம் எனப்படுவது. யாதும் அறிந்ததும், சர்வ வல்லமை உடையதுமான ஒன்று மனிதனுக்குள்ளேயும் புறத்தேயும் உள்ளது. யோகி அதனுடன் தொடர்பு கொண்டு அதனுடன் இழைகிருன். இறைவனுடைய சக்தியான அருளின் மூலமாகவும் நற்செயல்களின் மூலமாகவும் உலகில் பரவுவதற்கு ஒரு கருவியாகிருன்'' என்று விளக்கம் தந்தார்.

அரவிந்தர் கல்கத்தாவிலும், வெளியூர்களிலும் பல கூட்டங்களில் பேசினுர். அவருடைய கருத்துக்கள் என்றுமே வெறும் அரசியலோடு நின்றவை அல்ல. அரசியலுக்கும் அப்பால் அவர் சிந்திக்கத் தொடங்கியதை அவர் உரைகள் புலப்படுத்தின. இதற்கிடையில் அரவிந்தர் கைது செய்யப்படுவார் என்றும் நாடு கடத்தப்படுவார் என்றும் வதந்திகள் உலவின. சுவாமி விவேகாநந்தரின் சிஷ்யை சகோதரி நிவேதிதையும் இதனைக் குறிப்பிட்டுச் சொன்னுர். அரவிந்தர் இது குறித்துக் கவலை கொள்ள வில்லை. ஆனுல் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட இந்தியப் பகுதியில் இருக்கும் வரை தாம் அரசியலிலிருந்து விடுபட்டு இருக்க முடியாது என்று அவருக்குத் தெளிவாயிற்று.

## திறந்த மடல்

ஜூன் 31 கர்மயோகி இதழில் '' என் நாட்டவர்க்குத் திறந்த மடல் '' என்ற தலைப்பில் ஒரு செய்தியை விடுத்தார் அரவிந்தர். அதில் அவர் உணர்த்த விரும்பியது:

'' தலைவர்கள் வருவார்கள், போவார்கள். அவர்களைப் பற்றித் தேசிய வாதிகள் கவலைப்படலாகாது. எல்லா அரசியல் பேரியக்கங்களும் இறைவனுல் அனுப்பப்படும் தலைவனுக்காகக் காத்திருக்கும்—அத்தலைவன் வந்ததும் முன்னேறிப் பணியாற்றி இலட்சிய சித்தி பெறும். எனவே வரப்போகும் தலைவருக்காகக் காத்திருங்கள் '' என்று அச்செய்தியில் கூறினுர்.


பிப்ரவரியில் மாதக் கடைசியில் ஒரு நாள் இரவு அரவிந்தரைக் கைது செய்ய வாரண்டு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வந்ததும் பிரெஞ்சிந்தியப் பகுதியான சந்திரநாகூர் செல்வதென்று அரவிந்தர் முடிவுசெய்தார். 'கருமயோகி'யை நடத்துமாறு சகோதரி நிவேதிதைக்குச்சீட்டு எழுதி அனுப்பி விட்டுக் கங்கைக் கரையோரம் சென்று படகொன்றில் ஏறி,

சிலமணிநேரத்தில் சந்திரநாகூரை அடைந்தார். விரைவில் ''கருமயோகி'' ''தர்மம்'' இரு இதழ்களும் நின்று போயின.

சந்திரநாகூரில் அரவிந்தர் விஜயகுமார் தோட்டத்தில் சுமார் ஒன்றரை மாதம் யோக சாதனைகளில் ஈடுபட்டிருந்தார். வெளி உலகுக்கு அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியாமல் இருந்தது. பலவிதமான வதந்திகள் உலவின. இமயத்தில் தவம் புரிவதற்காகச் சென்று விட்டார் என்பதும் வதந்திகளில் ஒன்று. ஒற்றர்களை ஏமாற்ற இவ்வாறெல்லாம் புனைந்துரைக்கப்பட்டது. சந்திரநாகூர் வசதிப்படாததால், மார்ச்சு மாத இறுதியில் புதுச்சேரி செல்வதென்று அரவிந்தர் முடிவு செய்தார்.

## செந்தமிழ்த் தென்புதுவையில்

தென்னகத்தின் எழிலார்ந்த கடலோர நகரமும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழ் அன்று இருந்ததுமான செந்தமிழ்த் தென் புதுவை, இந்திய அரசியல் பெருமக்கள் பலருக்குத் தஞ்ச



புதுவை அரவிந்தாசிரம தியான மண்டபத்தில் ஒரு காட்சி

மளித்த இடமாகவும் இருந்தது. கவியரசர் சுப்பிரமணிய பாரதியார், சீனிவாசாச்சாரி முதலியோர்புதுவையில்இருந்த நேரம் அது. 'இந்தியா' என்ற பத்திரிக்கையையும்பாரதியார் நடத்தி வந்தார். பாரதியார் அனுப்பிய பத்திரிக்கைப் பிரதிநிதி ஒருவர் ஏற்கனவே கல்கத்தாவில் அரவிந்தரைச் சந்தித்துவிட்டுத் திரும்பியிருந்தார். அப்பேட்டியின் விவரம் 'இந்தியா' இதழில் வெளியிடப்பட்டது. 'வந்தே மாதரம்' வங்கத்திலிருந்து பரப்பிய கருத்துக்களையெல்லாம் தமிழ் கூறு நல்லுலகில் 'இந்தியா' பரப்பி வந்தது.

பாரதியார் முதலானோருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்ட பின்பு, அரவிந்தர் துணைக்கு ஒருவருடன் கல்கத்தாவில் இரவுக் கப்பல் ஏறி 4-4-1910 பிற்பகலில் புதுவை வந்து சேர்ந்தார். பாரதியாரும் மற்றவர்களும் அவரைத் துறைமுகத்தில் வரவேற்றனர். சங்கரன் செட்டியார் வீட்டு மாடிக்கு அழைத்துச் சென்றனர். எல்லாம் இரகசியமாகவே நடைபெற்றது.

## அரசியலிலிருந்து ஒதுங்கினார்

அரவிந்தர் எளிய வாழ்வே வாழ்ந்தார். யோக சாதனைகளிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தார். முக்கிய வேலை இருந்தாலன்றி யாரையும் பார்க்க விரும்பவில்லை. அக்டோபர் இறுதியில் அரவிந்தர், சங்கரன் செட்டியாரின் மற்றொரு இல்லத்துக்குக் குடியேறினார். அரசியல் ஈடுபாடுகளை முற்றிலும் நிறுத்திவிட்டார். தாம் தலைமை தாங்கி நடத்திய புரட்சிச் சக்திகள் சிலவற்றுடன் சில ஆண்டுகள் ஓரிரு தனி நபர்கள் மூலமாக அந்தரங்கமான கடிதத் தொடர்பு வைத்துக் கொண்டிருந்தார். சில காலத்துக்குப் பின் இதையும் கைவிட்டு விட்டார். அரசியலில் எத்தகைய பங்கு கொள்வதையும் முற்றிலும் தவிர்த்தார்.

அறிவியல் புலமை பெற்ற அரவிந்தர், அரசியல் புரட்சிக் கனலாக மாறி, பின் அருட்சித்தர் அரவிந்தராக மாறினார். அவருடைய நிறை ஞானத்தையும், அருளையும் அறிவாற்றலையும் வெளி உலகத்துக்குப் புலப்படுத்திய பெருமை தமிழ் சார்ந்த புதுவைக்கே கிட்டியது என்பது தமிழக மக்களுக்குப் பெருமை தருவதாகும்.

1910 முதல் 1950 வரை 40 ஆண்டுக் காலம் அரவிந்தர் புதுவையில் வாழ்ந்தார். அவர் அங்கு வாழ்ந்து வந்தார் என்பதைவிட உள்ளுணர்வு அனைத்தையும் உலகனைத்திலும் படரவிட்டு அவர் அங்குத் தங்கியிருந்தார் என்பதே பொருந்தும். உள் மனத்தின் உள்ளே உள்ளுணர்வுகளில் அவர் வாழ்ந்தார்.

உலகியல் வாழ்வுக்கு அவரைத்திருப்ப, குறிப்பாக அவரை மீண்டும் அரசியலுக்கு இழுக்க, 1910 முதல் 1928 வரை கூட, பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. லாலா லஜபதிராய், அவரை மீண்டும் அரசியலுக்கு வருமாறு அழைத்தார். பம்பாயில் ஒரு பெரிய பத்திரிக்கைக்கு ஆசிரியராகப் பொறுப்பேற்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டார்கள். சித்தரஞ்சன் தாசும் அவரை மீண்டும் அரசியலுக்கு வருமாறு வேண்டுகோள் விடுத்தார். ''உங்கள் சொல்லுக்கு மக்கள் காத்திருக்கிறார்கள்'' என்று கவியரசர் ரவீந்திரநாத தாகூர் கூறினார். மகாத்மா காந்தி தமது குமாரர் தேவதாஸ் காந்தியைத் தூது அனுப்பினார். ஆனால் இந்தவேண்டுகோள் எதற்கும் அரவிந்தர் செவிமடுக்கவில்லை.

## அரவிந்தர் பதில்

மீண்டும் அரசியலுக்கு வரும்படியும் தேசிய இதழ் ஒன்றின் ஆசிரியராகப் பொறுப்பேற்றுக் கொள்ளும்படியும் திலகரின் ஆதரவோடு வந்த கடிதத்துக்கு 1920 ஜனவரியில் அரவிந்தர் எழுதிய பதில் சுருக்கம் வருமாறு :—

''உங்கள் வேண்டுகோள் ஆசையைத் தூண்டுவதாக உள்ளது. ஆனால் அதை நான் ஏற்பதற்கில்லை. அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும் விரும்புகிறேன். இப்போது பிரிட்டிஷ் இந்தியாவுக்குத் திரும்ப, எனக்கு எண்ணம் இல்லை. பிரிட்டிஷ் அரசும் நான் அறிந்தவரை என் வருகையை விரும்பவில்லை. மீண்டும் நான் வந்தால், அனேகமாகச் சிறைவாசம் கிடைக்கும். எனக்கு வேலை நிறைய இருக்கிறது. இத்தகைய நேரத்தில் மன்னர் பிரானின் ஓட்டலில் விருந்தாளியாக நேரத்தை வீணடிக்க நான் விரும்பவில்லை. இப்போது நான் முழுச் சுதந்தரத்தோடு இருந்தாலும் கூட, இந்தச் சமயத்தில் இந்தியாவுக்கு வர விரும்ப மாட்டேன்.

தனித்த ஒரு குறிக்கோளை மனத்தில் கொண்டு இங்கு நான் வந்தேன். அந்தப்பணிக்காக எனக்குச் சுதந்திரமும் அமைதியும் வேண்டும். நாட்டின் அரசியல் நிலைமைக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. இந்தியாவுக்கு நான் என்ன செய்ய வேண்டுமோ அதை எனக்குரிய வழியில் செய்து கொண்டிருக்கிறேன். தற்போதைய குறிக்கோள் நிறைவெய்தாத வரை, வேறு வேலையைத் தொடங்குவதென்பது இயலாது. நான் இந்தச்சமயத்தில் இந்தியா திரும்புவேனாகில் பல்வேறு துறைகளில் பங்கேற்க வேண்டியிருக்கும்.

புதுச்சேரி நான் ஒதுங்கி வாழும் இடம். எனது தவத்துக்கு இதுவே குகை. இது மற்ற தவசிகளைப் போல் துறவுத் தவம் அல்ல. இது, எனக்குரிய

தவமுறை. நான் வெளியேறு முன்பு சாதனை சித்தி பெற வேண்டும்.

நான் அரசியலைக் குறைத்து மதிப்பிடவில்லை. அரசியலுக்கு மீறிய முக்கியத்துவமுள்ளவனாக நான் வளர்ந்துவிட்டதாகவும் எண்ணவில்லை. நான் எப்போதுமே ஆன்மீக வாழ்க்கையை வலியுறுத்துபவன். அதற்கேற்ற முறையிலும் வாழ்ந்து வருகிறேன். ஆனால் எனது ஆன்மீகம் என்பது சந்நியாசமோ, உலகத்தைத் துறப்பதோ அல்ல. இந்த உலகத்திலுள்ள பொருட்களை வெறுப்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை. நிறைவான ஆன்மீக வாழ்வில் எல்லாவற்றிற்கும் இடம் உண்டு.''

## அரை குடங்கள்

அரவிந்தரின் கடைசித் தம்பி வரீந்திரர், அந்தமானிலிருந்து விடுதலையானதும் எழுதிய கடிதத்திற்கு அரவிந்தர் எழுதிய பதில், தனித்த முக்கியத்துவம் பெற்றதாக விளங்குகிறது. 1920 ஏப்ரலில் எழுதப்பட்ட அக்கடிதம், மிக நீண்ட கடிதங்களில் ஒன்று. அதில் அரவிந்தர் குறிப்பிட்டிருப்பதாவது :

'' உனது கடிதத்துக்கு நான் இப்போது பதில் எழுதுவது என்பது சாதாரணமாகக் காணப் பெறாத ஒரு அதிசயம். கடிதத்துக்கு அதிலும் வங்காளியில் பதில்எழுதுவது ஆடிக்கு ஒரு தடவை மட்டுமே நிகழக்கூடியது. நான் எழுதத்தொடங்கும் இக் கடிதத்தை முழுதுமாக எழுதி அஞ்சலிலும் சேர்த்த பின்னர்தான் அந்த அதிசயம் நடந்தேறியதாக ஆகும்.

இப்போது இந்தியாவை—பாரதத்தை நீ கூர்ந்து பார். இங்கும் அங்குமாக ஒரு சில மேதைகள் இருக்கிறார்கள் என்பது தவிர, சொல்லுமிடங்களில் எல்லாம் சிந்திக்க விரும்பாத, சிந்திக்கும் திறன் இல்லாத, சக்தி இல்லாத, ஆர்வம் என்பதே துளியும் இல்லாத அப்பட்டமான சாமானிய மக்களே காணப்படுகிறார்கள். எளிய எண்ணங்கள், எளிய செயல்களில் இந்தியா திருப்தி அடைந்துவிடுவது போலத் தோன்றுகிறது. ஐரோப்பா ஆழ்ந்து சிந்திக்க விரும்புகிறது. பெரிய செயல்களைச் செய்ய விழைகின்றது. அங்குச் சாதாரணமான ஒரு மூட்டை தூக்குவோன் கூட எல்லா விஷயங்களையும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறான். தகவல்கள் பெறுவதோடு அவன் திருப்தி அடைவதில்லை. ஆழ்ந்து சிந்திக்கவும், அதிகம் தெரிந்து கொள்ளவும் விரும்புகிறான். ஆனால் ஒரு வேறுபாடு என்னவென்றால் ஐரோப்பியர் சிந்தனைக்கு ஒரு வரம்பு விழுந்து கிடக்கிறது. ஆன்மீகத் துறையில் அவர்கள் சிந்தனைத்திறன் மிகவும் மோசம்.

வங்காளிகள் எதையும் புரிந்து கொள்ளும் திறனும் மன எழுச்சியும், முனைப்பும் கொண்டவர்கள். இந்தக் குணங்கள் தான் இந்தியாவில் அவர்களுக்கு முன்னணிஇடம் தந்துள்ளது. இந்தக் குணங்கள் எல்லாம் தேவையானவை தான். ஆனால், இவை மட்டும் போதா. இவற்றுடன் ஆழ்ந்த சிந்தனை, துணிகரமான சக்தி, வீரனுக்குரிய வேகம், துன்பங்களைஏற்கும் சக்தி இவையும் சேருமானால் இந்தியாவுக்கு மட்டுமல்ல— உலகத்துக்கே தலைமை வகித்து நடத்திச் செல்ல இவர்களால் முடியும். ஆனால், வங்காளிகளுக்கு அத்தகைய பேரார்வம்



அரவிந்தர் கருத்துக்கள் உலகனைத்துக்கும் தெரியும்படிச் செய்த அரவிந்தாசிரம அன்னை

இருப்பதாகத் தோன்றவில்லை. காரியங்கள் எளிதில் நடைபெற்று விடவேண்டும் என்றும், சிந்தனை இல்லாமலேயே அறிவு வந்து விட வேண்டும் என்றும், உழைப்பு இல்லாமல் பலன்விளைய வேண்டும் என்றும் எண்ணுகிறார்கள்.

நான் இப்போது அடித்த 'லெக்சரிலிருந்து' வங்கத்தின் வருங்காலம் பற்றி நான் அவநம்பிக்கை கொண்டிருப்பதாக எண்ண வேண்டாம். வங்கத்திலிருந்து பெரிய ஜோதி வீசும் என்று பலர் எண்ணுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் குறைபாடுகளையும் காணுகிறேன். இந்தக் குறைகள் நீடிக்குமானால் வங்கத்தில் ஒளிவீச வேண்டும் என்று நாம் விரும்பும் ஜோதி, எழுச்சி பெற்றதாகவோ, நிலைத்து ஒளி வீசக் கூடியதாகவோ இல்லாமல் போய்விடும்.

நான் இப்போது என் நாட்டிற்குச்செல்ல விரும்பவில்லை. நாடு ஆயத்தமாக இல்லை என்பது அதற்குக் காரணம் அல்ல. நான் ஆயத்தமாகஇல்லை. அரைகுறையான மனிதன் ஒருவன், அரைகுறையாக உள்ள மக்களிடம் போய் என்ன செய்துவிட முடியும்?''

## அன்னையின் வருகை

1910-லிருந்து 1914 வரை நான்காண்டுக் காலத்தில் அரவிந்தருடன் இருந்தவர்கள், அவருடைய தொண்டர்கள் 4—5 பேர்கள் மட்டுமே. அரவிந்தரின் சீரிய எண்ணங்களை, கருத்துக்களை செயலாக்குவதற்கு வந்தவர் அன்னை! அவர் வருகையோடு அரவிந்தாசிரமம் புதுப் பொலிவு பெற்றது. அன்னை, பாரீசில் செல்வச் சிறப்பும் கல்வி ஞானமும் கொண்ட ஒரு யூதக் குடும்பத்தில் தோன்றியவர். இளமையிலிருந்தே அரிய மதிநுட்பம் வாய்ந்தவர். காவியம், ஓவியம், இலக்கியம், பாட்டு, பியானோ ஆகியவைகளில் வல்லவர். அன்னை முதலில் ஒரு வீரனை மணந்தார். ஆண் மகவை ஈன்றார். பின்னர் பால்ரிஷார் என்ற அறிஞரை மணந்தார். அவர் புதுவையில் அரவிந்தரைச் சந்தித்தார். தத்துவ ஞான விளக்கம் செய்ய 'ஆரியா' என்ற இதழ் நடத்த முடிவு செய்தனர். ஆனால் உலகப் போர் காரணமாக அன்னை விரைவில் ஐரோப்பா செல்ல நேர்ந்தது. 1914 ஆகஸ்ட் 15-ல் 'ஆரியா' பத்திரிகை தொடங்கப்பட்டது. அறிவின் செழுங்கனியாக, சிந்தனையின் செழும் சுடராக அவ்விதழ் விளங்கியது. மனிதன் பரிணாம வளர்ச்சியில் அடுத்த கட்டமாக உயர வேண்டிய நிலை, அடைய வேண்டிய பேறுகள், மானிட இனத்தின் ஒருமைப்பாடு, வேதம், உபநிடதம், கீதை ஆகியவற்றின் உட்பொருள், இந்திய நாகரிகம், பண்பாடு ஆகியவைகளைப் பற்றி எல்லாம் அரிய சிந்தனைக்குகந்த விளக்கங்களை 'ஆரியா' மூலம் தந்தார். இவை எல்லாம் பின்னர் நூல் வடிவம் பெற்றன.

அத்தகைய நூல் வடிவங்களில் குறிப்பிடத் தக்கவை: ''தெய்வீக வாழ்க்கை'', ''பூரண யோகம்'' ''மானிட வட்டம்'', ''மானிட ஒருமைப்பாட்டின் இலட்சியம்'' ''வருங்காலக் கவிதை'', ''வேதம்'', ''உபநிடதங்கள்'' ''கீதைக் கட்டுரைகள்'' ''இந்தியப் பண்பாட்டின் அடிப் படைகள்'', ஆகியன ஆகும். ஆறரை ஆண்டுக் காலம் நடந்த பின்பு 'ஆரியா' 1921-ல் நின்று விட்டது.!

1920-ல் அன்னை புதுவைக்குத்திரும்பி வந்த பிறகு ஆசிரமம் வளரத் தொடங்கியது. பலரும் சேர்ந்து வாழும் வாழ்க்கை தலைப்பட ஆரம்பித்தது. பல வீடுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டன. ஒழுங்கான தூய்மையான வாழ்க்கையைத் தரவல்ல பணி முறைகள் ஏற்படலாயின. 1926-ஆம் ஆண்டில் அரவிந்தர் அன்னையிடம் ஆசிரமப் பொறுப்புக்களை விட்டு விட்டு, தாம் உள் நின்று நடத்தி வரத் தொடங்கினார்.

இங்கு தனித் தன்மையான ஆன்ம வாழ்க்கைக்கும், அன்னை யின் மனத்துக்கும் ஒத்தாங்கு யாரிடத்து உள்ளார்வம் இருக்கிற தோ அவர்களே சீடர்களாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். அனுமதிக்கப்பட்ட ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் சொத்துக்களை அன்னையிடம் ஒப்படைக்குமாறு எதிர்பார்க்கப் பட்டது. அப்போது அவரவர் உலகியல் வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கை இரு பொறுப்புக்களையும் அன்னை ஏற்கின்றார். ஆரோக்கியமான வாழ்வுக்குரிய பொருத்தமான வசதிகளையும் அளிக்கின்றார். தற்காலிகமாகத் தங்கி ஆசிரம வாழ்க்கையில் பங்கெடுத்துக் கொள்ளவும் சிலர் அனுமதிக்கப்படுகின்றனர். அன்னோர்களின் செலவு அவர்களுடையதே. கொடுப்பதற்கு ஏதும் இல்லாதவர்களும், இவ்வித வாழ்க்கைக்கு அருகர் எனப்படின் அவர்கள் ஆசிரமத்தில் சேர்ந்து வாழ அனுமதிக் கப்படுகின்றனர்.

ஆசிரமம் இப்போது இருக்கின்ற நிலையில் சுமார் 2,000 ஆசிரம வாசிகள் உள்ளனர். அன்னைக் குரிய வீடுகளில் பெரும்பாலானோரும் ஏனையோர் வாடகை வீடுகளிலும் இருந்து வருகின்றனர். ஆசிரம நிருவாகச் செலவு மாதம் ரூ. 4 இலட்சம் ஆகிறது. உலகெங்குமிருந்து வரும் நன் கொடை, காணிக்கை இவைகளைக் கொண்டு இச் செலவு சமாளிக்கப்படுகிறது. ஆசிரமத்துக்குச் சேர்ந்த தோட் டங்கள், வயல்கள், பண்ணைகள் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆசிரமத்தின் பல்வேறு சேவைப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான சம்பளத் தொழிலாளர்களை ஆசிரமம் வைத்துப் பேணுகின்றது. ஆசிரம சட்ட திட்டங்கள் இந்தியாவில் அமலில் உள்ள சட்ட திட்டத்துக்கு முற்றிலும் ஒத்துள்ளன. அவர்கள் சங்கம் வைத்து நடத்த இடமும் தரப்பட்டிருக்கிறது.

## உபதேசங்களின் சாரம்

அரவிந்தர் உபதேசங்களின் சாரம் பின்வருமாறு :

'படைப்புக்கு ஒரு குறிக்கோள் உண்டு. அந்தக் குறிக்கோள் என்பது உணர்வின் மலர்ச்சியே தவிர வேறல்ல. சடத்திலிருந்து உயிர் தோன்றியது. புல், புழு, ஏனைய விலங்கினங்கள் என்று படிப்படியாக பரிணும வளர்ச்சி ஏற்பட்டு மனம் என்னும் பொருள் பிறந்தது. மனித உணர்வை சிறப்பாகப் பிரித்து, பிற உயிர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது தன்னையே நோக்கவல்ல முழு விழிப்புற்ற உணர்வு ஆகும்.

மனிதன் வளர்ந்து கொண்டே இருக்கிருன். தன் அளவில் மட்டுமில்லாது சமூகக் கூட்டு வாழ்க்கையிலும் அவன் உணர்வில் முழு நிறைவு அடையும் வரை, அறிவில் அவன் வளர்ந்தே ஆகவேண்டும். வாழ்வின் மர்மம் என்பது உணர்வின் வளர்ச்சியே ஆகும்.

தலைசிறந்த முழு நிறைவான வாழ்க்கை மனிதனுக்குக் கிட்டும் என்பது மட்டுமல்ல ; அது தவிர்க்க முடியாததும் ஆகும். தனி மனிதன் மேம்பாடு அடையும்போது சமூக வாழ்க்கையும் கூட அதே வார்ப்படமாக இருக்கும்.

உலக வாழ்க்கையினை மாற்றியமைப்பதில் இந்தியாவுக்குத் தான் அதிக வாய்ப்பும் பொறுப்பும் உண்டு. ஆன்ம உணர்வின் இருப்பிடமாக இருப்பது இந்தியாவே என்பது அரவிந்தர் கருத்து.

மனிதன் பெரும்பாலும் தன் மனம், உயிர், உடலின் மேற்பரப்பில்தான் வாழ்கிருன். தனக்குள்ளே மகத்தான செயல்களை நிறைவேற்றவல்ல சீவாத்மா ஒன்று உண்டு என்பதை அவன் உணர்ந்து விழிப்புறவேண்டியவனுக இருக்கிருன். இப்போது அவன் அதனிடமிருந்து பெறுவதெல்லாம் மிகச் சொற்பமே. மகத்தான ஆற்றல் பெறும் பொருட்டு முழுச் சீவனும் பயிற்சி பெற வேண்டும் என்று அவர் வலியுறுத்திஞர்.

அரவிந்தர் பிரம்மச்சாரியத்தை வலியுறுத்திஞர். பிரம்மச்சாரியம் என்ருல் பால் உறவில் ஈடுபடாமல் இருப்பது மட்டுமல்ல ; பால் உறவு குறித்து எண்ணம், பேச்சு எதுவுமில்லாத நிலை இருக்கவேண்டும். இதற்கு வகை செய்ய மனம் நித்தியமான உண்மையில் லயிக்க வேண்டும்.

பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடிப்பதால் உள் ஒளி பெருகும். தேஜஸ் வளரும். உடல், மனம், ஆற்றல் எல்லாவற்றின் வலிமையும் பெருகும் என்றார்.



இறுதியாண்டுகளில் அரவிந்தர்

ஏதேனும் ஒரு சமயத்தைப் படிப்படியாகத் தோற்றுவிப்பதோ பழைய சமயங்களை ஒருங்கிணைப்பதோ, புதியதொரு சமயத்தை நிறுவுவதோ அரவிந்தரின் எண்ணமல்ல. உள்ளார்ந்த தன் வளர்ச்சியே அவருடைய யோகத்தின் குறிக்கோள் ஆகும். யோகத்தின் மூலமாக, எல்லாவற்றிலும் உறையும் ஒரே ஆன்மாவைக் கண்டுபிடித்து மன உணர்விலும் உயரியதோர் உணர்வுக்குச் (சூப்ராமெண்டல்) சென்று பரிணமம் அடைதல் கூடும். அந்தப் பேருணர்வு மானிட இயற்கையை உருமாற்றித் தெய்வத் தன்மை வாய்ந்ததாக்கும் என்பது அவர் கருத்து.

புதுவையில் அரவிந்தரின் முதல் நான்கு ஆண்டுகள் 'மௌனத்தவம்' இருந்த ஆண்டுகள். பின்னர் 'ஆரியா' இதழ் நடத்தப்பட்ட 6 ஆண்டுக் காலத்தில், இப்பணிக்குத் தேவையான அளவு வெளி உலகத்துடன் அவர் தொடர்பு கொண்டிருந்தார். பின்னர் அவர் ஒதுங்கி வாழத் தலைப் பட்டார். 1926-க்குப் பின் அதிகம் ஒதுங்கி விட்டார். கடிதப் போக்குவரத்துக்கள் மூலமும் அன்னை மூலமுமே அவர் வெளி உலகுடன் தொடர்பு கொண்டிருந்தார். அந்த நாட்களிலும் அவர் அதிகாலை 5 மணி வரை வேலை செய்வார். பின்னர் ஆண்டுக்கு 4 நாட்கள் தரிசனம் தரும் முறை வந்தது. அவர் ஒதுங்கி வாழ்ந்தாரே தவிர, மக்களிட மிருந்து மக்கள் நலனிலிருந்து ஒதுங்கிவிடவில்லை என்பதை வலியுறுத்தினர். தமது யோக சாதனைகள் அனைத்தும் மக்கள் நல நன்மையைக் கருதியே என்று எடுத்துரைத்தார்.

## அரவிந்தரின் இறுதி

அரவிந்தர் சிறிது காலம் நோயுற்றிருந்த பின் 1950 டிசம்பர் 5-ஆம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவரது உடல் நான்கு நாட்கள் வரை சிதையாமல் பொன் நிறத் தோடு பொலிந்தது. டிசம்பர் 9-ஆம் நாள் ஆசிரம சாதகர் அமைத்த சமாதியில் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

அன்று அன்னை வெளியிட்ட செய்தி வருமாறு:

''எங்கள் குருநாதரின் சட உறையாக இருந்து வந்துள்ள உமக்கு எங்கள் எல்லையற்ற நன்றி உரியதாகும். எங்களுக்காக இவ்வளவுஞ் செய்து தொண்டாற்றி, உழன்று, துன்புற்று, எதிர்பார்த்து, எவ்வளவோ பொறுத்து வந்திருக் கிறீர்கள். யாவும் செய்யத் திருவுளங் கொண்டு முயன் றீர்கள், ஆயத்தம் செய்தீர்கள்; எங்கள் பொருட்டுச் செய்துமுடித்தீர்கள். நாங்கள் உங்களுக்கு எவ்வளவோ கடன்பட்டிருப்பதை என்றென்றும் ஒரு கண நேரம் கூட மறவாதிருக்க உங்கள் முன்னிலையில் அடிபணிந்து இறைஞ்சு கிறோம்.''


## உலகப் புதுமை நகரம்—ஆரோவில்

புதுச்சேரியிலிருந்து ஐந்து மைல் தூரத்தில் ஆரோவில் என்னும் உலக மாநகரம் ஒன்றை அரவிந்தர் ஆசிரமத்து அன்னை உருவாக்கி வருகிறார். உலகத்தின் பல நாடு களிலிருந்தும் இளைஞர்கள் தம் நாட்டு வளமான மண்ணைச் சுமந்து வந்து ஆரோவில் நகர அடிக்கல் பகுதியில் இட்டனர்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தமிழ் நெறிப்படி மனித குலம் ஒன்றே என்றும் எல்லா நாட்டு மக்களும் நம் உறவினர்களே என்றும் ஆரோவில் எல்லா நாடுகளுக்கும் உரியதே என்றும் உணர்ந்து இவ்வுலக மாநகரின் குடிமக்கள் வாழ்வார்கள்.

'ஆரோவில் உலகப் பொது நகராக வளர விரும்புகிறது. அதில் எல்லா நாட்டு மக்களும் சமயம், அரசியல், நாடு ஆகிய பற்றுக்களை எல்லாம் விட்டு மேன்மேலும் இசைவாக அமைதியுடன் நலம் பெற வாழ முடியும். மனித குலம் ஒன்றே என்னும் குறிக்கோளை அடைவதே ஆரோவில் நகரத்தின் கருத்தாகும்' என்று அன்னை விளக்கம் தந்திருக்கிறார்:

இந்த நகரம் தொழில் பகுதி, குடிவாழ்வுப் பகுதி, பண்பாட்டுப் பகுதி, அனைத்து நாடுகள் உறவு நலப் பகுதி என நான்கு பிரிவுகளாக அமையும், ஐ.நா. சபையைச் சேர்ந்த 'யுனெஸ்கோ' ஆரோவில் நகரத் திட்டத்தை



உலக மாநகரம்-ஆரோவில் நகரின் வரை வடிவம்

வரவேற்றிருக்கிறது. ஒவ்வொரு நாடும் அதனதன் நாகரிகத்தையும் கலாச்சாரப் பண்பாட்டையும் விளக்கும் தனிச்சிறப்பான கலைக்கூடங்களையும் மாளிகைகளையும் நிறுவும்படியும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

இந்த நகரின் மையத்தில் ஒரு அழகான தடாகத்தின் நடுவில் 'மாத்ரு மந்திர்' என்னும் கோயில் அமைக்கப்பெறும். இது சமயச்சார்பற்றதாக இருக்கும். குடி

யிருப்புப் பகுதியில் மனித குல ஒருமையை இலட்சியமாக ஏற்றுக் கொள்பவர்கள் 'ஓருலக மக்களாக' வாழ்வர்.

ஆரோவில் நகரத்தை நிருமாணிக்கப் பல நாடுகளிலிருந்தும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் இளைஞர்கள் வந்து, இங்கு பணியாற்றும் இளைஞர்களுடன் தோளோடு தோள் நின்று உழைக்கின்றனர். புதிய நகரில் இந்தியாவின் பகுதியான 'பாரத் நிவாஸ்' பகுதிகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. வேலை நடை பெற்று வருகின்றது.

ஆரோ மாடல் ஊரில் துவக்கியுள்ள பள்ளியில் தமிழ் தான் முதல் மொழி என அறிவிக்கப்பட்டுள்ளது. இணைப்புத் திட்டத்தில் சேர்ந்துள்ள கிராமக் குழந்தைகள், மற்றும் தொழிலாளர் குழந்தைகள், ஆசிரமக் குழந்தைகளுடன் சேர்ந்து கல்வி பயிலுகிறார்கள். காலப் போக்கில் உலகின் பல மொழிகளை விரும்பிக் கற்க ஆரோவில் நகரில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

ஒரே உலகம் என்ற சீரிய இலட்சியத்தை செயல்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தை வளர்ப்பதில் இந்த நகரம் உலகத்துக்கோர் புதுமைப் படைப்பாக விளங்கும் என்று கருதலாம்.

191764

CONNEMARA PUBLIC LIBRARY
9 - SEP 1972
MADRAS

# AUROBINDO CENTENARY—SPECIAL SUPPLEMENT.

Isssed by the Information and Public Relations Department, Government of Tamil Nadu.

CONNEMARA PUBLIC LIBRARY
9-SEP 1972
MADRAS

PHH
9/9/72